CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

அருட்பேராற்றலின் அன்புக்குரல்



வேதாத்திரி மகரிஷி

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh

ட்பேராற்றலின் அன்புக்குரல்
HE KIND VOICE OF THE DIVINE

யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி
Yogiraj Vethathiri Maharishi

Vethathiri Publications
180, Gandhiji Road,
Erode – 638 002.
Tamil.Nadu – India.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

முதல் பதிப்பு — 1992

© உரிமைப் பதிவு.

அச்சிட்டோர்,

வாழ்க வளமுடன்
24, நாச்சியப்பா வீதி,
ஈரோடு — 638 001.
Phone : 70164

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

முகவுரை

சிந்தனையாற்றல் மிக்க அன்பர்களே! நண்பர்களே! "அருட்பேராற்றலின் அன்புக்குரல்" என்ற தலைப்பில் யான் எழுதியுள்ள பத்துக் கவிகளுக்கு விளக்கவுரை எழுதி ஒரு சிறு நூலாக வெளியிடுகிறேன்.

இயற்கை வளங்கள் உலகம் முழுவதும் நிரம்ப இருக்கின்றன. மனிதனுடைய அறிவு விஞ்ஞான வளர்ச்சியால் நுட்பத்திலும், திறமையிலும் மேலோங்கி யுள்ளது. எனினும் மனிதகுல வாழ்வில் துன்பங்கள், சிக்கல்கள், பகை, பிணக்கு, போர் இவை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டேயிருக்கின்றன. இதற்குக் காரணம் மனித மனம் பழக்கத்தாலும் தேவையுணர் வாலும் எல்லை கட்டிய மனநிலையில் குறுகிவிட்டிருக் கிறது. இதனால் பொருள், புகழ், செல்வாக்கு, புலன் இன்பம் இவற்றில் தணியாத ஆசை கொண்டு உணர்ச்சிவயப்பட்ட நிலையில் இயங்கிக் கொண்டிருக் கிறது. முறையான அறிவுப் பயிற்சியின் மூலம் மனித குலம் இறையறிவும், உயிரறிவும், வினை-விளைவு நீதியறிவும் பெறவேண்டியது அவசியம்.

இந்த அறிவு விளக்கத் தேவையின் இன்றியமையாத் தன்மையை நீண்ட காலத்திற்கு முன்னமே உணர்ந்த முற்காலத்திய பேரறிஞர்கள் மக்கள் வயது, அறிவு வளர்ச்சி, அவர்கள் சமுதாயத்தில் ஏற்றுள்ள பொறுப்பு இவற்றிற்கு ஏற்ப, வேதாந்தம், சித்தாந்தம், உபநிடதம், புராணங்கள் என்ற பிரிவுகளில் பலப் பல நூல்களை வெளியிட்டிருக்கிறார்கள். காலம் மாறிக் கொண்டிருக்கிறது. இப்போது விஞ்ஞான வளர்ச்சியால் உலகில் எல்லா இடங்களிலும் பலப்பல

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

புதிய பொருட்களை உற்பத்தி செய்வது, உபயோகிப்பது, அதனால் ஏற்படும் விளைவுகளை உணர்ந்து திருத்திக்கொள்வது என்ற தடுக்க முடியாத பண்பாட்டு வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. ஒரு இடத்தில் வாழ்ந்திருந்த மக்கள் பல்வேறு இடங்களிலும், பல்வேறு இடங்களில் வாழ்ந்திருந்த மக்கள் ஒரே இடத்திலும் வாழ்ந்து வருகிறார்கள். எல்லா மொழிகளிலும் சொல், கருத்துக்களிலும் மாற்றம் ஏற்பட்டிருக்கின்றன. சில சொற்கள் வழக்கிழந்து போய்விட்டன. எனவே இக்காலத்தில் எளிதாக மக்கள் பயன் பெறத்தக்க அறிவுப் பயிற்சியும், அறநெறி விளக்கங்களும் இக்காலத்திற்கு ஒத்த மொழியில் வெளிவர வேண்டும். உலகம் முழுவதும் வாழும் மக்கள் அனைவரையும் இணைத்து நோக்கும் தொகுப்புணர்வில் மக்கள் சிந்தனையை உயர்த்த வேண்டும். மேலே காட்டிய, தெய்வம், உயிர், வினை-விளைவு நீதி இவை மறைபொருளாகவே இருக்கின்றன. இவை மக்கள் அறிவுக்கு ஐயமின்றித் தெளிவுபட வேண்டும். இந்தப் பெருமுயற்சியில் தொண்டு செய்ய இயற்கையாகத் தூண்டப்பட்ட யான் இதுவரையில் கட்டுரைகள், கவிகள் மூலம் என்னால் இயன்ற முறையில் அறிவுத் தொண்டாற்றி வருகிறேன்.

மேலே சொன்ன தெய்வம், உயிர், வினை விளைவு நீதி என்ற மூன்றைப் பற்றியும் எப்போதும் எனது சிந்தனை ஆழ்ந்திருந்தது. குண்டலினி யோகம் என்னும் உயிர் மேல் மனம் வைத்து தவமியற்றும் பயிற்சி எனக்கு அகத்தவத்தில் அறிவாட்சித்தரம் உயர்ந்த ஆசான் அருளால் கிடைத்தது. இந்த அரியதோர் அகத்தவப்பயிற்சி மூலம் எனது மன அலைச் சுழல்விரைவு குறைந்து கொண்டே வந்தது. சில

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.
சமயம் துரியாதீதமெனும் இறைநிலைத் தவம் இயற்றும்போது நான் விழிப்பு நிலையில் இருக்கும் போதே மனம் அசைவற்ற நிலையில் இறைநிலை யோடு ஒன்றி நிற்கும். முதலில் ஒரு நிமிடம், இரண்டு நிமிட நேரமே இந்த நிலை கிட்டும். ஆயினும் சில இரவுகளில் தூக்கம் இல்லாதபோது இதே நிலை வருவதும் பல நிமிடங்கள் நிற்பதும் உண்டாகும். இறைநிலையை அறியவேண்டி சிந்தனை அடிக்கடி செய்வேன்.அப்போது இறைநிலை, உயிர் நிலை இவற்றை விளக்கும் காட்சிகள் கிடைக்கும். சில சமயம் ஓசையே இல்லாத சொற்கள் மூலம் தத்துவ உண்மைகள் கிடைக்கும். இத்தகைய விளக்கங் களைத்தான் "அருட்பேராற்றலின் அன்புக் குரல்" என்று தலைப்பு கொடுத்து விளக்கியிருக்கிறேன். ஓசையில்லாத சொல் விளக்கமும், ஒளியில்லாத காட்சிகளும் எவ்வாறு என்று சில அன்பர்கள் சிந்திக்கலாம். அருட்பெருஞ்சோதி இராமலிங்க வள்ளல் பெருமான் எழுதியுள்ள சில செய்யுள்களில் இறைவன் பணித்தான், இறைவனோடு உரையாடினேன் என்று எழுதியிருக்கிறார். அவற்றைப் படித்தபோது இது எவ்வாறு என்று எனக்கு சிந்தனை வினா எழுந்தது. எனக்கு இதே அனுபவம் கிடைத்தபோது தான் வள்ளற்பிரானின் அருளுரைகளை ஒத்துப் பார்த்து உண்மை உணர்ந்து தெளிவு பெற்றேன். இவ்வாறான உணர்ந்த தத்துவ உண்மைகளும், வாழ்க்கையில் வழிகாட்டும் சிறந்த உரைகளும் ஆழ்ந்த சிந்தனையுடையோர்களுக்கு உண்டாவது நடைமுறை நிகழ்ச்சிகள். இவற்றை நாம் சாதாரண மனஓட்டம் என்று கருதுவோம். ஆயினும் உண்மையை விளக்குகிறேன். கடலில் நீரே அலையாக உயர்ந்து வீசிக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு அலைக்குள்ளும்

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.
நீர்தான் பொருள். அதன் அசைவு நிகழ்ச்சியே அலை. இதேபோன்று நம்மிடம் மெய்ப்பொருளான இருப்புநிலை அறிவாக இருக்கிறது. அதுவே நமது கரு மையத்தை இயக்க மையமாகக் கொண்ட சீவகாந்தத்தின் நிலைபொருள். அதிலிருந்து விரைவு கொண்டு எழுச்சி பெற்று வீசும் காந்த அலைதான் மனம்; அறிவின் படர்க்கை நிலைதான் மனம் என்று கொள்ளலாம். எனவே நமது மனதின் நிலைபொருள் அறிவு; இயக்க நிகழ்ச்சி மனம். பேரியக்க மண்டலத்தில் எங்குமே வான்காந்தம் நிறைந்துள்ளது. அதன் மூலம் மனமானது எந்தப் பொருளோடும், எந்த உயிரின் கருமையத்தோடும் தொடர்பு கொண்டு அங்குள்ள நிகழ்ச்சிகளையும், நிகழ்ச்சிப் பதிவுகளையும் ஊடுருவி அறிந்து கொள்ளும் வல்லமை படைத்துள்ளது. பழக்கமும் தேவையுணர்வும், பொருள், புகழ், அதிகாரம், புலன் இன்பம் எனும் நான்கில் உள்ள பேராசைப் பற்றும் மனதின் இயற்கையாக அமைந்துள்ள விரிந்தறியும் ஆற்றலையும். நுணுகி அறியும் திறமையையும் குறைத்து புலன் உணர்வை மாத்திரம் ஆழமாகப் பதித்துக் கட்டுப்படுத்தி விடுகிறது.

அகத்தவத்தால் அலை விரைவு மனதுக்குக் குறையும்போது விரிந்துணரும் ஆற்றலும் நுணுகியறியும் திறமையும் அதிகரிக்கிறது. மனஅலை விரைவு குறையும் அளவுக்கு அறிவு இறை நிலையாற்றல் என்ற நிதியை அந்தந்த அளவில் அறிந்து கொள்கிறது. எல்லா மனிதரிடத்திலும் இப்பேராற்றல் இயல்பாக உள்ளது. பயிற்சியும் பழக்கமும் வெற்றியைத் தரும். பயனை எல்லாரும் அனுபவிக்கலாம்.

இறைநிலையோடு இணைந்து நிற்கும் அறிவிற்கு இறைநிலையில் அடங்கியுள்ள மறை பொருட்கள்

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh

ஒவ்வொன்றாக உள்ளுணர்வாகக் கிடைக்கும். இதனை இறைவனே கூறுகின்றான் என்று மக்களுக்கு எடுத்துச் சொல்லுவது அறிவையறிந்த பேரறிஞர்கள் அருளுரை. இந்தத் துறையில் யான் தவத்தாலும் அறநெறி பின்பற்றிய வாழ்க்கை முறையாலும் பெற்ற அனுபவங்களை அருட்துறையில் நாட்டமுடைய அனைவருக்கும் தெரிவிக்க •வேண்டுமென்ற கடமை யுணர்வு எனக்கு இயல்பாகிவிட்டது.

இவ்வாண்டு 1992 மே மாதம் 5 தேதியிலிருந்து 31 தேதி வரையில் அமெரிக்க நாட்டில் லாஸ் ஏஞ்சலிஸ் நகரில் சாந்த மாணிக்கா (Santa Monica) என்ற பகுதியில் ஒரு வாடகை வீட்டில் தங்கியிருந்தபோது, இறை நிலை விளக்கம், பேரியக்க மண்டல இயக்க ஒழுங்கு, மனித உடல், அறிவு, இயக்கங்கள் பற்றிய விளக்கங் களோடு சில கவிகள் உள்ளத்திலிருந்து உருவாகி எழுந்தன. அவற்றை ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்து நமது அமெரிக்க அன்பர்களுக்கு விளக்கினேன். மகிழ்ச்சி பெற்றார்கள். அனைத்து கவிகளையும் யான் பாட, ஆங்கிலம் தெரிந்த அன்பர் விளக்கம் படிக்க அனைத்தும் ஒலிப் பதிவு செய்யப்பட்டன. அதே கவிகளையும் விளக்கங்களையும் நூல் வடிவில் கொண்டு வரவேண்டுமென்ற எண்ணம் உருவாயிற்று. ஆங்கில உரையோடு தமிழிலும் விரிவுரை எழுதி அத்துடன் கருமையம், Genetic Center என்ற கட்டுரைகளையும் இணைத்து இதனை ஒரு சிறு நூலாக்கி எனது 82வது பிறந்தநாள் அன்புப்பரிசாக நண்பர்களுக்கும் அன்பர் களுக்கும் அளிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

ஊன்றிப் படித்து, சிந்தித்து, உணர்ந்து, தெளிவு பெற்று, அறிவாட்சித் தரத்தை உயர்த்திக் கொள்ள அனைவரையும் வாழ்த்துகிறேன்.

வாழ்க வையகம். வாழ்க வளமுடன்

அன்புள்ள அருட்தொண்டன்

வேதாத்திரி

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

My dear friends! I am Thomas Fitzgerald, one of the members of World Community Service Centre of California. I wish to enlighten you about some important spiritual philosophy revealed by our master, Vethathiri Maharishi. All of you know that Vethathiri Maharishi visits U.S.A. annualy to teach Simplified Kundalini Yoga. Inaddition to meditation and physical exercise techniques, he teaches the philosophy of Nature, which is a complete science of living. Understanding the highly enlightening facts of Nature and the science of living, we have all been greatly benefitted and inspired. This year, 1992, he was staying in Santa Monica, Los Angeles, and writing poetry in his leisure time. I was curious to know the meaning of these poems and requested him to explain them to me. Swamiji was kind enough to take the trouble to do so. I was immensely gratified and wish this may be available to all our friends who do not know Tamil.

There are ten poems in this series, entitled, THE KIND VOICE OF THE DIVINE. As I understood, I will convey their wonderful meaning to you. In the first poem, he explains how he attained realization of Truth.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

பொருளடக்கம்

1. அருட்பேராற்றலின் அன்புக் குரல் 1

2. கருமையம் 41

3. Genetic Center 63

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

அருட்பேராற்றலின் அன்புக்குரல்

அகத்தவத்தில் என் மனதை உயிரின் மீது வைத்தேன்
அலைவிரைவு குறைந்துமனம் நிலைத்து அறிவாச்சு
இகத்துணர்வில் புலன் ஐந்தின் பதிவுகளைத் தாண்டி
எல்லையிலாப் பெருவெளியில் இணைந்து நிலை பெற்றேன்
திகைப்பு இல்லை நான் அதுவாய் அதுநானாய்ப் பெற்ற
தெளிவினிலே இறைவெளியே தெய்வமென்றும் அதனின்
மிகச்சிறப்பாம் ஆற்றல்கள் பேரண்ட மென்றுணர்ந்தேன்
மேலும் தெய்வத் தன்புகுரல் கேட்டு மகிழ்கின்றேன்.

வாழ்க வளமுடன்

அருமை நண்பர்களே! அன்பு நிறை பேரறிஞர்களே! அருட்பேராற்றலின் அன்புக் குரல் என்ற நூலில் இது முதல் கவி. அகத்தவம் முறையாக இயற்றினால் மன அலை எவ்வாறு விரைவு குறைந்து மெய் நிலையாகிய அறிவாகத் திகழ்கின்றது என்ற அனுபவ மான உண்மையை விளக்குகின்றது. இதன் ஆங்கில மொழி பெயர்ப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது. யான் எழுதும் கவிகளுக்கு பதஉரை தேவையில்லை. எனினும் சில இடங்களில் வரும் ஆழமான தத்துவ, விஞ்ஞானக் கருத்துக்களுக்கு விளக்க உரை எழு தினால் தமிழ் மொழி மூலம் ஆன்மீக அறிவைப் பெருக்கிக் கொள்ள விரும்பும் அன்பர்களுக்கு பயனுடையதாகவும் எளிதாகவும் இருக்கும் என்ற நோக்கத்தில் இந்த நூலில் வெளிவந்துள்ள அனைத்துக் கவிகளுக்கும் விளக்கம் எழுதுகிறேன். படித்து, சிந்தித்து, தெளிவு பெற்று, பின்பற்றி பயன் பெறுவீர்களாக!

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

மூலாதாரம் என்பது மனித உடலுக்கு கருமையம் ஆகும். உடலில் விரைவாகச் சுழன்றோடிக் கொண்டிருக்கும் சீவகாந்தம் இங்கு தான் மையம் கொண்டிருக்கிறது. சீவகாந்தம்தான் மனிதஉடலில் பிரணவ சரீரம் (causal body) எனப்படும். இங்குதான் சூக்கும சரீரம் என்னும் உயிராற்றலும் மையம் கொண்டிருக்கிறது. உயிராற்றல் எனும் விண்துகளின் சுழற்சி விரைவால் எழும் விரிவலைதான் சீவகாந்தமாகும். உடலுக்கு மூலப்பொருளான விந்துவும் இதே இடத்தில்தான் மையம் கொண்டிருக்கிறது. எனவே மூலப் பொருளான வித்து, உயிருக்கு முக்கியப் பொருளான **விண் துகள்** (life energy particle) மனதுக்கு மூலப் பொருளான சீவகாந்தம் இவை மூன்றும் மையம் கொண்டிருப்பது உடலுக்கு மையமான பகுதியாகிய மூலாதாரமே. இங்குதான் மனிதன் உடலாலும் எண்ணத்தாலும் செய்யும் செயல்களின் அலைகள் ஈர்க்கப் பட்டு சுருக்கி இருப்பாக வைக்கப்பட்டு தக்க மன அலைச் சுழல் அமையும்போது எண்ணங்களாக மலரும். அந்த எண்ணங்களைச் செயல்படுத்துவதற்கு உடலிலுள்ள செல்கள் முனைப்பு கொண்டு இயங்கும். இந்தக் கருமையம்தான் மனிதனுடைய பெருநிதி. மனிதன் செயலாலும் மனத்தாலும் பெறும் தன்மைகள் அனைத்தும் சுருங்கி அவனுக்கு அறிவாட்சித் தரமாக அமைகிறது. மேலும் கருத்தொடர் கொண்ட எண்ணிலடங்கா தலைமுறைகளில் அவ்வந்த உடல், மனம், ஆற்றிய வினைப்பதிவுகள் அனைத்தும் கம்ப்யூட்டர் யந்திரத்தில் பதிவாவது போல பதிவாகி, அவையும் எல்லாத் தலைமுறைகளிலும் அறிவாட்சித்தரமாகத் தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கிறது. இத்தகைய மனித வாழ்வின் பெருநிதியைத் தூய்மையாகவும், வலுவுடையதாகவும்,

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.
அமைதியும் இன்பம் பெருக்கும் திறனுடையதாகவும், தரத்தக்கக் கலையே அகத்தவம் ஆகும். இந்தக் கருமையத்தில் உற்பத்தியாகும் சீவகாந்த ஆற்றல் உடல் முழுவதும் ஒரு சீராகப் பரவ இயற்கையாக அமையப்பட்டவை உடலில் ஏழு நிலையங்கள். இவை ஆதாரங்கள் என்று வழங்கப்படுகின்றன. 1. மூலாதாரம், 2. சுவாதிஷ்டானம், 3. மணிப்பூரகம், 4. அனாகதம், 5. விசுக்தி, 6. ஆக்கினை, 7. துரியம் என்ற பெயரால் இவை யோக நூல்களில் வழங்கப் படுகின்றன. இந்த மையங்களை துணை சீவகாந்த மையங்கள் (Endocrine Glands) என்று கருதவேண்டும்.

இந்தக் கருமையத்தின் முழு ஆற்றல்களும் கீழ்ப் பகுதியாகிய மூலாதாரத்திலேயே இருக்குமானால் மனித மனத்தில் பொருள் பற்றும், மக்கள் பாசமும், உணர்ச்சி வயப்பட்ட எண்ணங்களும், செயல்களும் முதன்மைத் தன்மையாகவே இருக்கும். இந்தக் கருமைய ஆற்றலில் ஒரு பகுதி மேலே அமைந்துள்ள ஆக்கினை, துரியம் ஆகிய மையங்களுக்குக் கொண்டு வந்தால் மனிதனிடம் இறையுணர்வும், உயிர் விளக்க மும், அறநெறி நின்று வாழும் தன்மையும் உண்டாகும் எனும் உண்மையினை முன்னோர்கள் கண்டுபிடித் துள்ளார்கள். இத்தகைய அகத்தவ முறையைத் திறமையுள்ள ஒரு குருவின் மூலம் கற்றுக் கொள்ளும் வாய்ப்பு எனக்கு இளம் வயதிலேயே கிடைத்தது.

முறையாகவும், விடாமுயற்சியோடும் பல ஆண்டுகள் அகத்தவம் பயின்று வந்தேன். மன அலை விரைவு குறைந்து இறைநிலையாகிய இருப்பு நிலையில் அசையாமலிருக்கும் பேறு சிறுகச் சிறுகக் கிட்டியது. சிறு வயதிலிருந்து என்னிடம் கடவுள், உயிர், வினை-விளைவு நீதி பற்றிய வினாக்கள் அறிவாட்சித்

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

தரத்தில் ஆழமான பதிவாக இருந்தன. மன அலைச் சுழல் விரைவு குறைந்த போது என் வினாக்களுக்கு அகக்காட்சியாகவும், உள்ளுணர்வாகவும் விளக்கங்கள் கிடைத்தன. மனித இன வாழ்வுக்கு இன்றியமையாத இந்த அறிவுப் பெருநிதியைத் தேடுபவர்களுக்கெல்லாம் அளிக்க வேண்டுமென்ற கடமையுணர்வில் என் வாழ்வை ஈடுபடுத்திக் கொண்டுவிட்டேன்.

பருஉருவம் உடல், நுண்ணுருவம் உயிர், பிரணவ உருவம் சீவகாந்த அலை இம்மூன்றும் அடங்கிய திருவுருவமே மனிதன். உடல் வரையிலே எல்லை கட்டி மனித மனம் இயங்கும்போது அதனை நரஅகம் என்பார்கள். இங்கு உணர்ச்சிகளே பெருகும். துன்பங் களும் சிக்கல்களுமே வாழ்வில் மிகையாக இருக்கும். உயிர் விளக்கம் பெற்றால் உயிரைப் பற்றியும் சீவகாந்தம் பற்றியும் விளக்கம் உண்டாகும். இதனால் தீய வினைப் பதிவுகளை திருத்தி, இன்பமும் அமைதி யும் காணலாம். ஆகையால் உயிர் உணர்ந்த அறிவு நிலையை சுவர் அகம் (சொர்க்கம்) என்பார்கள். இந்த அறிவுநிலையில்தான் ஆன்மாவுக்கு பழிச் செயல்பதிவுச் சுமையிலிருந்து விடுதலை கிட்டும். இத்தகைய உயர் நிலை அறிவு, அகத்தவத்தால்தான் கிட்டும். இந்தப் பேற்றினைப் பெற்றபோது இறை நிலையையும் அறிவையும் உணர்ந்தேன். இறைவனே அறிவாக இயங்குவதை உணர்ந்து கொண்டேன். அதை வெளிக்காட்டும் அடையாளமாக நீயும் நானும் ஒன்றே என்று இருகரம் குவித்தேன். ஓ! என் அறிவாக விளங்கும் பெரும் பொருளே! பேரறிவே!

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

The Divine Voice of Universal Being

I am practising Kundalini Yoga, which is the inner travel of mind. The centre of my life-force has been raised from Mooladhar,the sex gland, to Agna Chakra, the point between the eyebrows. As I meditated on my life-force, my mental frequency was reduced and gradually reached the Static State, said to be Consciousness. It was truly a transcendental state, crossing all the imprints of my sensory experiences and expanding to the whole universe and to the Absolute Static State, the pure Eternal Space. I realised that my Consciousness and the Static State, God, are one and the same. I realised myself as Consciousness and the Same as God, the Eternal Space – Almighty and all-pervasive. My mind was in peace and ecstasy. I felt as if a new door in my mind was opened. Thus I understood by the Divine Voice of the Eternal Being that God has two inherent characters; Force and Consciousness. By its own force it evolved as the universe, where Consciousness works ubiquitously as order of function, from the smallest particles up to the greatest stars. After this experience, whenever I think of the universe the Divine Voice sounds within me as intuition. This keeps me in constant ecstasy.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

அறிவு விரிந்தால் அவனே நான்

பரவெளியாய்ப் பரந்து விரிந்துள்ள பெரும் பொருளே
பற்றற்ற தெய்வமென்று பற்றினேன் உணர்ந்தேன்
சிரம் அமர்ந்து மன அலையைச் சீரமைத்த பேற்றால்
சிறப்புடைய பேரண்ட சீரியக்கம் கண்டேன்
நரன் என்ற சிற்றெல்லை நான் கடந்தபோது
நான்நீயாய்க் கூர்தலறம் நல்லியல்பு அறிந்தேன்
கரம் குவித்தேன் நீயேநான் இரண்டும் ஒன்றே என்று
களங்கமின்றி நீநானாய் விளங்கும் பேரறிவில்

ஓ!' எல்லாம் வல்ல முழுமுதற் பொருளான தெய்வமே! நீ சுத்த வெளியாக எல்லை காணமுடியாத அளவுடையதாக அமர்ந்திருக்கிறாய். உன்னைக் கண்ணால் பார்த்துக் கொண்டே மக்கள் நீ ஆற்றல் ஏதுமற்ற சூனியம் என்று அலட்சியம் செய்துவிடு கிறார்கள். அதனால் உன்னை உணர்ந்து கொள்வதால் ஏற்படும் பயனை இழந்து விடுகிறார்கள். உன்னில் அடங்கியுள்ள விரைவுஆற்றல், பேரறிவு, இந்த இரண்டு தன்மைகளையும் உணர்ந்து கொள்ள முடிய வில்லை. இதனால் உன்னைக் கண்ணால் கண்டும் உன்னை உணர்ந்து கொள்ள முடியாததும் மனிதனின் குறையல்ல. யானையானது உருவத்தில் பெரியது. அதை எறும்பு கடிக்கிறது. ஆனால் யானையை எறும்பால் பார்க்க முடிவதில்லை. இதேபோல உனது எல்லையில்லாத வடிவத்தை முழுமையாக பார்க்க முடியவில்லை. மேலும் உன்னுள் அடங்கி யுள்ள பேராற்றலான விரைவும், பெருஞ்சிறப்பான முற்றறிவும் புலன்கள் வரையில் உணர்வுக்கு எல்லை

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.
கட்டிக் கொண்டு வாழும் மனிதனுக்கு எப்படி விளங்கும்? உன்னை மதித்து உன்னிலே எனது மனதை ஆழ்த்தி தவமியற்றியதன் காரணமாக நீயே என்னுள் நிறைந்து விழிப்பூட்டி உன்னையறிவித்தாய். என் அறிவாக நீ ஆற்றும் உண்மையை உணர்த்தி விட்டாய்.

மேலும் உனது விரைவு உனக்குள் பெருக்கெடுக்க அதனைத் தனிப்படுத்தி சுழலியக்க அலையான விண் துகளாக்கி அதைச் சுற்றிலும் நிறைந்துள்ள நீ விண் என்ற நுண் துகளை எல்லாப் புறமும் அழுத்திக் கொண்டே இருக்கிறாய். அதனால் விண் எனும் நுண்துகள் இடைவிடாமல் சுழன்று கொண்டிருக்கிறது. சுழற்சி விரைவில் உள்ள விண்ணின் மையப்புள்ளி யாக நீயே கருமையமாக அமைந்து உனது ஈர்ப்பு ஆற்றல் மூலம் விண் துகள்கள் நெருங்கி இயங்கச் செய்கிறாய். விண்துகள் சுழற்சி அதைச்சுற்றிலும் உள்ள உன்மீது உரசும்போது சுழலலையான விண் ணுக்குத் துணையாக விரிவலையாக விண்துகளைப் போன்றே நிழல் வடிவ நுண் துகளைப் பெருக்கி விட்டாய். உன் விரைவு சுழலலையாகி, அதன் மையத்தில் நீயே இருப்பு நிலையில் ஈர்ப்பு ஆற்ற லாகி அதைச் சுற்றிலும் உனது அழுத்தத்தால் அந்த விண் துகளை இடைவிடாது இயங்கச் செய்து விண்ணின் சுழல் விரைவு சுற்றிலும் இருப்பு நிலை யாக அமர்ந்திருக்கும் உன்னில் உரசும்போது உனது பகுதியே விரிவலையான நிழல் வடிவ அலையாகி, இத்தகைய ஒழுங்காற்றல் எனும் உனது முற்றறிவால் பேரியக்க மண்டலத்தைத் தோற்றுவித்து காத்து வரும் உனது சீரியக்க பேராற்றலை நீயே எனக்கு காட்சி வடிவில் காட்டிவிட்டாய்.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

அகத்தவத்தில் எனது மனதை உச்சியில் (துரியத்தில்) வைத்து தவமியற்றும் போது பேரியக்க மண்டல இயக்கங்களை காட்சியாக உணர்த்திவிட்டாய். மனிதன் என்ற சிற்றெல்லை கடந்து, விரிந்த பேரண்டமாக உன்னில் இணைந்து நிறைவு பெறுகிறேன். இருப்பு நிலையிலிருந்து இயக்க அலையான விண்ணாகி அவை கூடிய உலகங்களாகவும், உயிர்கள் பலவாகவும் ஒன்றிலிருந்து ஒன்றாக உருவாகி மலர்ந்துள்ள பரிணாம ஒழுங்கையும், உயிரினங்கள் வாழ்க்கைக்குத் தேவையை நாடிய உந்துதலே இடத்துக்குத் தக்க உறுப்புகள் உருவாகும் இரகசியங்களையும் உணர்ந்து கொண்டேன். உன்னோடு எனது அறிவு கலந்து ஒன்றாகக் காணும் உணர்வில் நீயும் நானும் ஒன்றே என்று எழுந்த உள்ளுணர்வில் இரு கைகளையும் கூப்பி நிற்கின்றேன்.

Realization of Truth enables one to hear the Divine Voice

The second poem gives more insight in continuation of my realization of self and God.

Oh, Almighty, by your Grace I realized your existence and greatness. I identified you as the Plenum ubiquitous unified force, although you seem to be Absolute Space to the human sensory perception. When I began meditation at the crown chakra my mental wave penetratively flowed with whirling motion through my brain cells. All irregularities and disturbances caused by my emotional moods and by the sinful deeds of my ancestors, from whose genetic character I evolved, were gradually rectified and began working in natural

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.
rhythm and with my awareness. When my mental frequency was reduced to attunement with cosmic consciousness, I could realize many secrets about the universe and its order of function.

My conditioned mind which was previously limited and identified with my physical body and thinking, "I am a man", expanded to the universe and to the Static State beyond. I understood by my inner vision that the Universal Being itself evolved as energy particles, and by the association of energy particles further evolved into all the masses of the universe, including living beings. Also I could envision the order of natural justice which provided the evolution of limbs and senses by instinctive force to fulfil the physical needs according to the time and environmental conditions.

I could not forget the fact that the Divine Eternal Static State shines in me as my consciousness. Without the least doubt I felt my consciousness and you, the great Universal Being, are the same automatically my palms joined together as a symbol that both are one. Thus, again and again I hear your Divine Voice.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

மெய்ப்பொருள் உணர்த்துதல் மேலான கடமை

இறைவா உன் இருப்பு நிலை இறை வெளியாய்க் கண்டேன்
இயக்க அலை விண்ணெனவும் அதன் விரிவு அலையே
மறைபொருளை ஊறு ஒலி மணம் ஒளியாய் சுவையாய்
மலர்த்தி மனம் உணரச் செய் மாயகாந்தம் உணர்ந்தேன்
குறைமனத்தோர் நிறைவு பெற்று குற்றவழி செல்லா
கூர்ந்த மெய்யுணர்வு பெற குண்டலினி தொண்டின்
நிறையுணர்ந்தேன் குழப்பமின்றி நேர்வழி வாழ்கின்றேன்
நீதியொடு வினைவிளைவு தெரிந்து கொண்ட பேற்றால்

இறைவா! உனது இருப்பு நிலை தூயவெளியென்று உணர்ந்து கொண்டேன். உன்னிலிருந்து நுண்துகளாக எழுந்த விண்துகளையும் அதன் சுழலால் ஏற்படும் விரிவலையையும் அந்த விரிவலையே காந்தமென்ற சிறப்படைந்து அழுத்தமாக ஒலியாக, ஒளியாக, சுவையாக, மணமாக பஞ்ச பூதங்களில் தன்மாற்றம் பெறுவதையும், உயிரினங்களில் அதே தன்மாற்றம் மனமாக இயங்குவதையும் உணர்ந்து கொண்டேன். உனது காந்த ஆற்றல் சிறப்பால் செயலுக்கு ஏற்ற விளைவு உண்டாகிறது. ஒவ்வொருவருக்கும் இந்த நீதியை உணர்த்திவிட்டாய். இந்த உண்மைகளை அறியாமல் தவறு செய்து துன்பம் அனுபவித்துத் தத்தளித்துக் கொண்டிருக்கும் மனித குலத்திற்கு உன்னை உணர்த்தி, உனது நீதியை உணர்த்தி, அறவழி வாழச் செய்யும் அகத்தவத் தொண்டினை என் கடமையாக ஏற்றுக் கொண்டு அறவழி வாழ்கின்றேன்.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

I am fully satisfied

The third poem adores the Universal Being as the unmoving state and all the forces of universe as its action state.

Oh! Divine Almighty! It is an open secret that you exist throughout the universe as Absolute Space; Yet the majority of humanity cannot realize and accept that you are the supreme phenomenon, God. By your grace I understood that you are the Eternal Space. Furthermore I realized that the universal magnetism is your own wave force radiated from the energy particle which is nothing but the infinitesimal fraction of your own self. The empirical significance of your existence is your physical transformation from magnetism into pressure, sound, light, smell, taste and mind.

Oh, Almighty, You have revealed to me the laws of cause and effect by which every one derives pain, pleasure peace or ecstasy according to the nature of their deeds. I am doing my service to convey your divine law to humanity, teaching the process of Kundalini Yoga and the philosophy of your supreme nature. Without knowing your greatness and the natural laws, many people are doing wrongs and suffering from pain and miseries as a result. I follow the virtuous way of life because I am spiritually enlightened by your Divine Grace. I wish all my fellow beings will also attain divine knowledge through my service.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

இருப்புநிலை வெளியும் இயக்கநிலை அலையும் இணைந்த நிலை காந்தம்

> இருப்புநிலை இறைவெளியாம் ஈர்ப்பு ஆற்றலாகும்
> இயக்கம் அதன் நுண்பகுதி எதிர்த்துத் தள்ளும் ஆற்றல்
> கருப்பொருளாம் இவ்விரண்டும் காந்தம் என்பதாச்சு
> காணுகின்றோம் பேரியக்க களத்தில் உயிர் வகையில்
> திருப்பொருளாய் இயங்கும் மனம் தேர்ந்து இறையுணர
> தெய்வம் ஈர்ப்பு அறிவாயும் அதன் விரிவே அலையாய்
> விருப்பு வெறுப் பின்பம் துன்பம் உணரும் மனம் தேர்வோம்
> வேண்டல் வளம் கண்டு வினை விளைவறிந்து வாழ்வோம்

கோடிக்கணக்கான கோள்களையும் நட்சத்திரங் களையும் கொண்டது பேரியக்க மண்டலம். ஒவ்வொரு கோளும் ஒழுங்கு தவறாமல் இயங்குகின்றன. உலகில் கோடி கோடியென உயிரினங்கள் வாழ்கின்றன. அவையனைத்தும் நெறியான இயக்க நிகழ்ச்சிக்குள்ளடங்கி வாழ்கின்றன. மனிதனோ இவையனைத்தையும் பற்றி அறிந்து கொள்ளவும், ஒவ்வொன்றோடும், அறிவோடு, அல்லது உயிர்த் தொடர்போடு, அல்லது உடல் தொடர்பு கொண்டு இன்பம் துய்த்து வாழத் திறன் பெற்றவனாக இருக்கிறான். எனினும் மனிதன் சிந்தனை உயரும்போது பல வினாக்கள் பேரியக்க மண்டலத்தைப் பற்றியும், உயிரினங்களைப் பற்றியும், மனநிலை பற்றியும் எழுகின்றன. நுண்ணணுவாகிய விண் முதல் பெரிய உருவமுடைய சூரியன் வரையிலான எல்லாத்

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh
தோற்றங்களும் வடிவ அமைப்பு, குணம், இயக்க ஒழுங்கு என்னும் மூன்றிணைந்த ஏற்பாட்டில் வழுவாமல் இயங்குகின்றன. இவை எவ்வாறு? எந்த ஆற்றல் இவற்றையெல்லாம் முறையும் காலமும் தவறாமல் நடத்தி வருகிறது என்ற வினாக்களுக்கு விடைகாண தத்துவ ஞானிகளும், விஞ்ஞானிகளும் தொடர்ந்து ஆராய்ந்து வருகின்றனர். இதே வினாக்கள் எனக்குள்ளும் எழுந்தன. தெய்வத்தை முன்வைத்து உலக தோற்றம், நிகழ்ச்சிகள், விளைவுகள் இவற்றை விளக்கிய தத்துவ ஞானிகள் தெய்வம் என்ற ஒரு பேராற்றலை சிந்தனையாற்றல் பெற்றவர்கள் எல் லாருமே எளிதாக உணர்ந்துகொள்ள ஒரு பயிற்சி வழியோ அல்லது தெளிவான விளக்கங்களோ கொடுக்க முடியாமல் விட்டுச் சென்றனர். விஞ் ஞானிகளோ விரைவு, பருமன், காலம், தூரம் என்ற நான்கு அளவு அலகுகளைக் கொண்டுதான் எல்லா இயக்கங்களும் நடைபெறுகின்றன என்ற அடிப் படைக் கருத்தைக் கொண்டு பேரியக்க மண்டலத்தின் இருப்பு நிலையையும், இயக்க வரம்பையும் ஆராய கணித முறைகளையும் நுண்கருவிகளையும் கொண்டு ஆராய்ச்சி நடத்தி வருகின்றனர். எனினும் தத்துவ ஞானம், விண்ணியல் என்ற இருதுறைகளிலும் மனித அறிவுக்கு நிறைவு அளிக்கத்தக்க விளக்கம் கிடைக்கவில்லை. ஏன் என்ற வினாவை எழுப்பிக் கொண்டு யானும் ஆராயத் தொடங்கினேன். யான் கண்ட விளக்கங்களை வரிசைப்படுத்தி சொல்கிறேன்.

பேரியக்க மண்டல்த்தை இருப்புநிலை, இயக்க நிலை என்ற இரண்டாகப் பிரித்துக் கொள்வோம். இதனை பொருள் - நிகழ்ச்சி, சிவம் - சக்தி, மெய் - உயிர், சத்து - சித்து, நிலை - அலை என்ற தொடர்

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh

சொற்களால் விழங்கப்படுவதை அறிவோம். இருப்பு நிலையும், இயக்க நிலையும் படிப்படியாக ஒன்றோடு ஒன்று கூடி சிறப்படையும் வரிசைகளில் ஒரு தொடர் விட்டுப் போனாலும் பேரியக்க மண்டல பரிணாமமும், அதன் இயக்க ஒழுங்கும் முழுமையாகக் கிடைக்காது. எனது வாழ்நாளில் 50 ஆண்டு காலம் பிரபஞ்ச நிகழ்ச்சிகளைப் பற்றி ஆராய்ந்த யான் உணர்ந்த உண்மைகளை உலக மக்கள் அனைவரும் அறிந்து கொள்ள ஏற்றவாறு எளிய முறையிலும் எளிய மொழியிலும் வான்காந்த தத்துவம் என்ற தலைப்பில் வெளியிட்டிருக்கிறேன். அதன் சுருக்கம் கீழ்க்கண்டவாறு.

சுத்தவெளி என்பது இருப்புநிலை. இதனில் வேகம், விவேகம் (விரைவு, அறிவு) எனும் இரண்டு தன்மைகள் அடக்கம் பெற்றுள்ளன. இருப்பு நிலையிலிருந்து நுண்ணிய இயக்க அலையாக விண் தோன்றியது. விண்ணின் விரைவான சுழற்சியால் விரிவுஅலை தோன்றி இருப்பு நிலையோடு இணைந்து அது காந்த ஆற்றலாக விளங்குகிறது. காந்த ஆற்றல், விண் கூட்டு இயக்கங்களின் அடர்த்தி நிலைகளுக் கேற்ப அழுத்தமாக, ஒலியாக, ஒளியாக சுவையாக மணமாக தன்மாற்றம் பெறுகிறது.

இந்த காந்த ஆற்றல் உயிரினங்களில் மனமாக இயங்குகிறது. எல்லா நிகழ்ச்சிகளும், நிலைகளும் (இருப்பு) ஈர்ப்பு ஆற்றலும் (இயக்கம்) தள்ளும் ஆற்றலும் இணைந்தவையே.

இந்தத் தொடர்களை முழுமையாக உணர்ந்து கொண்டால் சந்தேகமின்றி இருப்பும் இயக்கமும் விளங்கும். விஞ்ஞானிகள் இருப்பு நிலையை விட்டு

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

விட்டார்கள். இயக்கங்களுக்கெல்லாம் முதல் அலகு ஆகிய விண்ணையும் கண்டு பிடிக்க முடியவில்லை. அதனால் காந்த ஆற்றல் அவர்கள் அறிவுக்கு முழுமை யாக பிடிபடவில்லை.

தத்துவ ஞானிகள் அகத்தவத்தால் மனதை நுண் ணியக்க அலைக்குக் கொண்டு வந்து இறைநிலையை உணர்ந்தார்கள். எனினும் அனைவரும் அறியும் வகையில் பயிற்சி முறையை விளக்காது விட்டுவிட்டனர்.

இறைநிலையை அறிய வென்றால் அதுவே மனிதனிடம் அறிவாக அமர்ந்துள்ள உண்மை உணர வேண்டும். அவ்வாறு அறிவையறியும் பயிற்சி யும், அதனால் பெறும் விளக்கமும்தான் அறிவியல் ஆகும். விஞ்ஞானிகள் நுண்ணிய இயக்க அலகு ஆகிய விண்ணைப்பற்றியே ஆராய்கின்றனர். அதனால் அவர் பெறும் விளக்கம் விஞ்ஞானம், விண்+ஞானம் அல்லது விண்ணியல் ஆகும். விண் ஞானத்தால் விண்ணை உணர்ந்து அதற்கு பிறப்பிட மான மெய்ப்பொருளை (இருப்பு நிலையை) உணர்ந் தால் அங்குதான் அதுவே அறிவாக உள்ள உண்மை யும் விளங்கும். அப்போதுதான் விண்ணியல் நிறைவு பெற்று அறிவியல் ஆகும். இங்குதான், தெய்வம், உயிர், மனம் (காந்த அலை) என்ற மூன்று மறை பொருட்களும் எல்லாருடைய அறிவுக்கும் விளக்கமாக வரும்.

The Secret and Greatness of Universal Magnetism

- The fourth poem is about the universal magnetism and bio-magnetism. Listen, my friends! Here an important secret is revealed which links the universe and mankind.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

What you perceive as Absolute Space everywhere and neglect as emptiness is an illusion and self-deceit. It is the Supreme Universal Being, God. God's nature is attractive force, its infinitesimal fraction with spinning motion is repulsive force. These two jointly function as universal magnetism throughout the universe. This very same mystic phenomenon functions within all organisms as bio-magnetism. It gives one's mind immense pleasure to know the secret that the universal magnetism is a great mystic phenomenon existing between the unseen static state, God, and the perceivable universe, penetratively linking both. Without knowledge of universal magnetism, one can neither understand God nor the universe in a true sense.

With this understanding, seriously think of realizing the existence and function of your mind. You will understand the wonder that the bio-magnetic wave's psychic extension is mind. In going deeper, one can understand the fact that the genetic center, situated at the center point of the physical body, is the source of bio-magnetism. The static state of bio-magnetism is consciousness. Its dynamic wave function is the psychic extension, mind. Through this research one can realize that the basic state of his mind is God and his peripheral wave function is mind.

This enlightenment enables one to appreciate the prosperities and providential treasure he has and understand the moral ways to fulfil the needs for survival, enjoyment and perfection of consciousness.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

இறையன்பின் வினை விளைவு நீதி

அறிவாக என்னுள்ளே அமர்ந்தியங்கிக் கொண்டே
அகன்ற பேரண்டத்துள் அடங்கியுள்ளவற்றை
பொறி ஐந்தின் புலன் ஐந்தின் இயக்க அலை மூலம்
புரிந்து கொள்ளும் நுட்பம் எனக்கு அளித்திட்டாய்
நெறிபிறழ்ந்து மனிதன் ஆற்றும் வினையை அதன் விளைவை
நீயேதான் கருமையத் திழுத்து நுண்மையாக்கி
இறுக்கி இருப்பாய் வைத்து ஏற்றநாள் விரித்து
இன்பதுன்பமாய் உணர்த்தும் உனது நீதி கண்டேன்.

இந்தக்கவி அறிவை அறிந்தால் அனைத்தும் விளங்கும் என்ற உண்மையைக் காட்டுகிறது. ஓ! இறைவா! நீ அறிவாக என்னுள் அமர்ந்து இயங்கு கிறாய் என்பதை உணர்ந்து கொண்டேன், இதனால் எனது ஐந்து புலன்கள் இயக்கமும் ஒழுங்குக் குள்ளாகி உணர்ச்சிகளைத் தூண்டாத அமைதியும் விழிப்பும் கொண்ட நிலையை அடைந்துவிட்டன. இப்போது எனது ஐம்புலன் உணர்வுகளில், உனது அருள் நடனத்தையே பேரியக்க மண்டலம் அனைத் திலும் காண்கிறேன். உனது பேரறிவின் திறனை விளக்கும் ஒரு அற்புத நாடகத்தையும் எனக்கு உணர்த்தி விட்டாய். ஐந்து புலன்கள் மூலம் உணரும் உருவம், ஒளி, ஒலி, சுவை, மணம் இவற்றை மூளை செல்களில் அழுத்தப் பதிவுகளாக்கி, மனிதன் மையப் பகுதியில் நீ அமைத்துள்ள கருமையத்தில் இழுத்து சுருக்கி இருப்பாக வைத்து விடுகிறாய். பிறகு அந்தப் பதிவுக்கேற்ற மன அலைச்சுழல் (mental frequency) அமையும்போது கருமையத்தில் அடங்கியுள்ள

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.
அலையை விரித்து மூளையின் மூலம் எண்ணங்களாகக் காட்டி அதன் தூண்டுதலால் உடல் இயக்கம் செயல் புரிய, தக்க இன்ப, துன்ப விளைவுகளை அனுபவங் களாகத் தருகிறாய். இதன் மூலம் வினைகள் எவ் வாறு பதிவு பெறுகின்றன? எங்கே இருப்பாக உள்ளன, எப்படி மீண்டும் எண்ணங்களாகவும், செயல்களாகவும் மலர்ந்து இன்ப துன்ப விளைவுகள் ஏற்படுகின்றன என்ற வினை விளைவு நீதியை உணர்த்திவிட்டாய்.

The Results of Actions are the Divine Play

The fifth poem deals with the wonder of the genetic center. Oh, Supreme Being! Your kindness and compassion functioning in me as consciousness have revealed all secrets of the universe which are your manifestation. You have also provided me with perceptive ability to understand the forms, sound, light, smell and taste which are your physical transformation through the universal magnetism.

I understand your divine justice whereby you attract all the waves of one's deeds through his senses and brain cells and store them in the genetic center as his earned treasure for life. In time, according to the character of the deeds, you precisely make the stored waves into pleasure, pain, peace or ecstasy and deliver these to the feelings of the same person.

In your wonderful evolutionary process I understand the genetic center in the living being is your greatest

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

mystical architectural art. By your divine voice I understood that the genetic center comprises the sexual vital fluid, which is the core principle of the physical body; the life-force, which is the core principle of the astral body; and the bio-magnetism which is the core principle of causal body. These all stay together as an interlinked mechanism characterising the personality of the living being.

சுத்த வெளியே மெய்ப்பொருள்

சுத்த வெளி மெய்ப்பொருளில்
சுழலியக்க விரிவுஅலை சேரக்காந்தம்
இத்தகைய காந்தமது இடமொக்க
மின்சாரம், ரசாயனம் ஆம்
எத்தகைய இயக்கங்கள் விண்துகளில்
பருப்பொருளில் நிகழ்ந்தபோதும்
அத்தனையும் வான் காந்தக் களத்தினிலே
பதிவாகும் இருப்புமாகும்.

பேரியக்க களக் காந்தம், பிறந்து வாழ்
உயிர்களது சீவகாந்தம்
சீரியக்கமாய் நடத்தும் சிறப்புகளை
உணரும் போதென்ன விந்தை
ஓரியக்கம் இருப்பு நிலை அழுத்தமது
ஊடுருவி விண் மண் எல்லாம்
நேரியக்கமாய் ஒன்றில் ஒன்றாய் ஒன்றோ
டொன்றிணைந்து எழும் விளைவு அனந்தம் கோடி

— ஞானக்களஞ்சியம்

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

செயலில் விளைவை இணைத்த திருவிளையாடல்

சுழற்தட்டு விளையாட்டில் சுற்றிவிட்டோன் பெறல்போல்
சொல் எண்ணங்கள் செயல்கள் காந்த அலையாகி
சுழன்றோடி விரைவு ஒக்கச் சென்று முடிவான
சுத்தவெளி அழுத்தத்தால் பின்னோக்கி வந்து
சுழன்றியங்கும் சீவகாந்தக் கருமையம் ஈர்த்து
சுருக்கி இருப்பாய் வைத்துக் காலத்தில் மலர்த்தும்
சுழற்சி ஈர்ப்புக் காப்புன் திருவிளையாட்டென்று
சொல்லாமல் விளக்கிவிட்ட சொற்கடந்த பொருளே.

இறைவா! உன்னுடைய திருவிளையாடல்களைக் கண்டும் உணர்ந்தும் பேரின்பம் அடைந்து கொண்டிருக்கிறேன். மனிதன் பிறர் மீது பகையுணர்வு கொள்கிறான். அவனை அழிக்கும் கருத்தோடு எண்ணத்தில் திட்டமிடுகிறான். பேராசை, சினம் முதலிய ஆறு குணங்களாகி அவற்றின் எண்ண அலைகளை வீசுகிறான். அதேபோல மற்றொருவன் பிறருக்கு நன்மை செய்ய எண்ணுகிறான். நினைந்து வாழ்த்துகிறான். இத்தகைய செயல்கள் மூலம் தனது காந்த ஆற்றல் அலைக்கப்பட்டு அவனுடைய தன்மைகளாக மாறுகின்றன என்ற விளக்கம் தந்தாய். மேலும் வெளியிலே செல்லும் அவனது எண்ண அலைகள் எவ்வாறு அவனை நோக்கியே திரும்பி வந்து கருமையத்தில் அமர்ந்து இருப்பாகின்றது என்ற உண்மையினை ஒரு விளையாட்டுக் கருவியைக் காட்டி உணர்த்திய பெருமையை நான் எவ்வாறு புகழ்வேன்? சுழல்தட்டு விளையாட்டில் தட்டு

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

போன்ற கருவியைச் சுழற்றி வீசுகிறான் ஒருவன். அந்தக் கருவி (Boomerang) அவன் வீசும் விரைவுக் கேற்ப ஓடிச் சென்று பின்னர் திரும்பி அவனிடமே சேருகின்றது. அதுபோல ஒருவனிடமிருந்து எழும் எண்ண அலைகள், வான் காந்த வெளியில் மிதந்து ஓடுகிறது. வான்காந்தத்தில் உள்ள இருப்பு நிலையாக உள்ள நீ உன் அழுத்தத்தால் அந்த அலையை வளைத்து அதற்கு வட்ட அமைப்பைக் கொடுக்கிறாய். அந்த அலைக்கு அத்தகைய திருப்பம் வந்தபோது, தான் புறப்பட்ட இடத்தை நோக்குகிறது. அப்போது அவ்வெண்ண அலையை வெளியிட்டவனது கருமைய ஈர்ப்பு அதை தன்வசம் இழுத்து சுருக்கி இருப் பாக்கி வைத்துக் கொள்கிறது என்ற உண்மையினை அகக்காட்சியாகக் காட்டி எனக்கு உனது வினை விளைவு நீதியை அறிவித்த பெருங்கருணையைப் போற்றுகிறேன்.

Cause and Effect

The sixth poem explains the cause and effect system, There is an object known as a "boomerang" If one throws the boomerang it will go to a certain distance and return to the thrower. Similarly, if one does any deed, whether good or bad, the characterized wave will return to the doer and his genetic center will attract and shrink it into infinitesimal volume and store it as an imprint. After a time, the stored wave will project to the whole body covering the physical cells, and brain ceils and result in feelings of pleasure, pain, peace or ecstasy.

I will explain the philosophy behind this. Every action affects the bio-magnetic force. A characterized

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

wave is emitted with any action one does. The universe is filled with universal magnetism. The static state of the universal magnetism resists any wave and pushes it back. As per the speed of any wave, it will travel a particular distance, curve into a circle and finally return to the one who emitted it. With the initial action, there is an imprint by the force of the wave propulsion, which strongly marks and characterises the genetic centre. Thereby, the genetic center of the person identifies the returning wave, attracts it, shrinks it and stores it. If the action is one which disturbs one's own body and mind, that will also take effect with a small ring of waves between the cells, senses and limbs and the genetic center. If it is connected with external things or other living beings it will become an extended wave to travel and return to the doer's genetic center. This is natural justice; the law of cause and effect. The bio-magnetic wave is the causal body. The cause and effect system is always working inbetween the causal body and the physical body.

O, divine Being! You have shown me all these secrets with kindness and compassion; I understand that all of these are your divine play. How can I ever praise You sufficiently?

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

இறைவன் திருவிளையாடல்கள் ஈர்ப்பு ஆற்றல் ஒன்றால்தான்

உலகங்களில் ஈர்ப்பு உள்மையம் கொண்டும்
உயிர்வகைகளைக் காந்தக் கருமையம் கொண்டும்
நலமுடனே வடிவம் குணம் நல்லியக்கச் சீரால்
நடுநிலையாம் இறையாட்சி நடத்தும் சீர்மறந்தோர்
புலன் உணர்வால் அழிக்கின்றார் பூவுலக வளத்தை
புறஉலகை விண்ணியலால் தூய்மை செய்தால் போதா
பலவகையில் சீரழிந்த சீவகாந்த மையம்
பண்பட்டு மக்கள் உய்ய அகத்தவமும் வேண்டும்.

இறைவா! நுண்ணிய விண் துகளின் மையப் பகுதியில் நீயே சுத்த வெளியாய் அமைந்து ஈர்ப்பு ஆற்றலை அளித்து, அவ்வணுக்கள் ஒன்று கூடும் இயல்பை ஏற்படுத்தியிருக்கிறாய். அந்த நுண்ணிய விண்துகள்கள் இணைந்த கூட்டு தோற்றமான கோள் களிலும் உலகங்களிலும் மைய ஈர்ப்பு (Centripetal Force) அமைத்து, உயிரினங்களின் மையப் பகுதியில் கருமையம் அமைத்து, பல கோணங்களில் உனது அழுத்தம் என்ற பேராற்றல் ஒவ்வொன்றுக்கும் வடிவம், குணம், இயக்க ஒழுங்கு (Pattern, Precision, Regularity) என்ற மூன்றிணைப்பு இயக்க நியதியை ஏற்படுத்தி ஏதும் சிறிதும் தவறின்றி இயக்கி வரு கிறாய். இதனால் உயிர்களின் தேவைகளை உலகச் செழிப்பால் நிறைவு செய்து வருகிறாய். உந்தன் கருணையின் பெருமையை உணராத சிலர் உலகில் இயற்கை வளங்களைச் சீரழித்து வருகிறார்கள். இந்தக்

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

கேட்டினைத் தடுத்து உலக வளம் காக்க விஞ்ஞானிகளும் சமுதாய நலம் நாடும் பேரறிஞர்களும் முயற்சி எடுத்துள்ளார்கள். மனித இனம் விழிப்புணர்வு பெற்று எடுத்துள்ள இந்தப் பொருள்துறை சீர் அமைப்புக் கடமையை உணரும்போது ஓரளவு மனதுக்கு ஆறுதல் தருகிறது. என்றாலும் ஒரு பெரிய ஓட்டை மனிதனிடம் இருக்கிறது. அதை அடைக்க வேண்டும்.

மனிதன், பருவுடல், நுண்ணுடல் (Astral Body) பிரணவ உடல் என்னும் சீவகாந்த உடல் (Causal body) என்ற மூன்றும் ஒன்றாக இணைக்கப்பட்டு ஒன்றால் ஒன்று, ஒன்றுக்குள் ஒன்று என்ற இணைப்பியக்கம் கொண்டவன். பருவுடலுக்கு மூலப் பொருளான வித்துவும் நுண்ணுடலுக்கு மூலப் பொருளான உயிர்த் துகள்களும் (Energy Particles) மன உடலியக்கங்களுக்கு மூல ஆற்றலான சீவகாந்தமும் மையம் கொண்டு இயங்கும் நிலையம் கருமையம் (Genetic Centre) ஆகும். தவறான செயல்களாலும், எண்ணங்களாலும் இந்தக் கருமையத்தின் மேலான தன்மைகளை பெரும் பாலோர் கெடுத்துவிட்டிருக்கிறார்கள். இதனால் தான் மனிதனே மனிதனுக்குத் தீங்கிழைக்கும் துணிவும் கொடுமைகளும் சமுதாயத்தில் பெருகிக் கொண்டிருக்கின்றன. புற உலகைச் சீர் செய்ய அறிஞர்கள் எடுக்கும் முயற்சியோடு மனிதன் பெரு நிதியான கருமையத் தூய்மைக்கும் வழிவகுக்க வேண்டும். உடல் வளம், மன நலம், சமுதாய அமைதி இவற்றைக் காக்க வேண்டுமாயின் மனிதனுடைய கருமையத் தூய்மைக்கு ஏற்ற உடலையும், மனதையும் ஒழுங்குபடுத்தும் பயிற்சியான அகத்தவப் பயிற்சியை வயதுவந்த அனைவரும் அடைய ஒரு திட்டம் வகுத்துச்

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh

செயல்படுத்த வேண்டும். இதனை தத்துவ ஞானிகள், ஆன்மீகத் தலைவர்கள் தங்கள் கடமையாகக் கொள்ள வேண்டும். மனிதன் சீரானால் உலகம் சீராகும் என்ற பழமொழியையும் நினைவுப்படுத்திக் கொள்வோம்.

The Function of God is surrounding Pressure and Gravity

This is the seventh poem explaining how the consciousness of Almighty is working as order of function in both the universal field and in living beings.

O, Almighty! From your force the energy particle evolved as your fraction. Your mighty pressure all around it, made it revolve with immense speed. From the speedy revolving motion a centripetal force was created which attracts other particles. The same syst... of centripetal force is working in every mass c... universe. All planets, suns and stars have a ... center formed by centripetal force. By the th... the attraction of the centre, the repu... periphery and th... mpression by th... Eternal Force, the existence, self-rotati... speed of each mass in the universa... regulated. Thus all celestial bodies e... a natural rhythm. Similarly, ... provided the genetic center ... whirlpool of bio-magne... vital fluid, life-force... deeds and thou... personality ... -iate results.

...ces: of th... surrounding prec... ...isely ...move with Divine, have living being as a where the sexual the imprints of are stored which characterizes the the living beings and produces approp-

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

The power point of mind, body and spirit is the genetic center-the center of generation, creativity and potential spiritual maturity. In this genetic center resides the sum total of the human personality.

Passed down and continuously modified through the hereditary links of countless generations, the genetic center is the intrinsic core and culmination of human evolution for, it includes all physical, mental and intellectual qualities.

In human beings, the spiritual aspect of the genetic center is what is known as the "soul". In most individuals the super-conscious quality of the soul is latent. However, with sincere and earnest striving, this latent capacity may unfold into conscious awareness. When the soul is thus awakened, one is said to be"enlightened" The soul, therefore, is the most valuable treasure of human …erience, and the quintessence of the total human …ality. It is the compendium of all characters and …es of the personality evolved by Nature and … from the primordial universe through all … evolutionary process.

particle, … atic center point in each energy
the genetic ce… tal force of all celestial bodies and
the universal func… ving beings, you are maintaining
constant ecstasy and gr… hout error or fault. I am in
realize all these secrets by … to You for making me
revelatory vision. … divine voice and

Without knowing your loving and compassionate maintenance, the majority of the people of the world

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.
are destroying the ecology of the earth and disturb the purity of their own genetic centers also. It is some consolation that many humanitarians and scientists are concerned to save the natural environment of the earth. In addition to that a spiritual enlightenment program to purify and save the genetic center of mankind by realization of Truth and to follow a virtuous way of living also is necessary. This is the responsibility of spiritual masters and philosophers.

அறிவு, உயிர், இறை நிலைகள் :

கடவுள் உயிர் கர்மத்தின் பயனை நல்கும்
காந்த ஆற்றல் இவையறியக் கருதவத்தில்
படரு மனஅலை நிறுத்தி நுணுகிப்பார்க்க
பார்க்கும் மனமே அறிவும் பரமுமாச்சு
தொடர்ந்து கண்ட தெளிவு இறைநிலை இருப்பாம்
தூயவெளி அதன் நுண்ணியக்கமே விண்
நடனமிடும் விண் சுழலின் அலை இருப்பில்
நட்புக் கொள்ள இக்கூட்டு காந்தமாச்சு

எல்லையற்ற இறையாற்றல் என்னுள்ளும் புறமும்
இவ்வுலகும் வானுலகும் எங்கும் நிறைந்துள்ள
நல்ல உண்மை நானறிந்த நாள் முதலாய் நாவில்
நலமளிக்கும் சொற்களையே பேசும் உரம் பெற்றேன்
இல்லை என்ற சொல்லுக்கே இடமின்றி வாழ்வில்
எல்லா வளங்களிலும் ஏற்றமே காண்கின்றேன்
பு ல மண் பொன் கல் நீர் எதை நினைந்த போதும்
பாது நடனம் இறையறிவாய் பொருத்தி ஆடல் கண்டேன்.

— *ஞானக்களஞ்சியம்*

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

இறையுணர்வு பெறும் ஆற்றல் எல்லாருக்கும் உண்டு

மறைபொருளாம் அறிவு சிவம் இரண்டும் ஒன்றாய் நானாய்
மனிதன் தெய்வமாய்த் திகழும் மாபதம் பேறானால்
இறையுணர்வால் தன்முனைப்புப் பேரறிவாய் மாறும்
எப்போதும் ஈசன் குரல் உள்ளுணர்வாய்க் கேட்கும்
குறையறிவில் பொருட்கள் புகழ் புலன் இன்பம் இவற்றில்
கொடிய வறுமை பெருகும். நிறைவு கிட்டா வாழ்வில்
நிறைநிலையை எவரெனினும் முயற்சித்தால் பெறலாம்
நேர்வழியோ அகத்தவமும் நிறையற வாழ்வாகும்.

அறிவு ஒரு மறை பொருள். அதைக் கொண்டு தான் பேரியக்க மண்டலப் பொதுவான மறைபொருள் தெய்வ நிலையை உணர முடியும். எந்த இயக்க மானாலும் இருப்பு நிலையில்தான் மோதவேண்டும். அதில்தான் முடியவும் வேண்டும். இங்கே உணர்ந்து கொள்வது எது? அலையாக இயங்கி மோதுவதா? அல்லது இருப்பாக இருந்து தாங்குவதா? இருப்புதான் உணர்கிறது. எல்லாத் தோற்றங்களிலுள்ள இயக்க அலையை எங்கும் நிறைவாயுள்ள நிலைபொருள் இருப்பு நிலை-இறைவெளிதான் உணர்வாகப் பெறு கிறது. ஆகவே இறைவெளியான இருப்பு நிலை பேரறிவு - (Super-Consciousness) எனவும் அகண்டா காரமாக அது நிறைந்திருப்பதால் (Cosmic-Consciousness) வானறிவு எனவும் போற்றப்படுகிறது. அறிவுதான் நான் என்னும் பொருளாக உள்ளது என்றும் அது தான் இருப்பு நிலையாக தெய்வமாகவும் உள்ளது

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.
என்றும் உணரும் பெரும் பேறு மனிதனுக்குக் கிட்டி விட்டால் அவன் தெய்வமாகவே திகழும் பெருமை யுடையவனாகிறான். ஆதி முதல் அணுவரையில் அவனேயாகி அனைத்திலும் அவனே நிறைந்த பொருளாக இருப்பதால் அறிவே நான் என்று உணர்ந்து அதுவே தெய்வமாகவும் இருக்கிறது என்ற பேரறிவில் அவன் எல்லாம் உணரும் ஆற்றல் பெற்றவனாகிறான். இதனை அறிவறிந்த பெரியார் வள்ளுவப் பெருந்தகை

"ஐயப்படாது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தோடொப்பக் கொளல்"

என்ற கவி மூலம் விளக்கியிருக்கிறார்.

இந்தப் பேரறிவில் விழிப்போடு இருப்பவர் களுக்கு எதைப் பற்றி நினைத்தாலும் அதிலிருந்து வரும் விளக்கம் இறைவனே பேசுவதுபோல இருக்கும். இந்த மனநிலையில்தான் முழுமையான அமைதி மனிதனுக்குக் கிட்டும். அறிவை அறியும் வரை அது குறையுடையதாகவே இருக்கும். அந்த நிலையில் பொருள், புகழ், அதிகாரம், புலனின்பம் என்ற நான்கில் தன்னை இணைத்துக் கொண்டு இன்னும் வேண்டும், இன்னும் வேண்டும் என்ற குறையுடைய தாகவே, வறுமை மிஞ்சியதாகவே இருக்கும். அறிவை யறியும் ஆற்றல் அனைவரிடமும் உண்டு. அதற்கு பயிற்சி வழி அகத்தவமும், அறநெறி பற்றி வாழும் முறையும் ஆகும்.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

Realization of Truth will neutralize Ego

This is the eighth poem which explains that the. realization of Truth will melt away the ego.

When one realizes that the subjective phenomena consciousness and God are one and the same, and further realizes that consciousness is self, his personality becomes elevated to the state of God. The ego which evolved from illusion and sinful imprints disappears. Only awareness of Truth and virtuous deeds remain with him. In such a transcendental state of consciousness, the cosmic consciousness gives its divine voice and intuitional guidance. The poverty which arises from greed for material wealth, sensory enjoyments, fame and power will not be present anymore. To achieve this spiritual goal, realization of Truth and consciousness is imperative. Everyone is provided with such an ability by the divine; only sincere effort and dedication are needed. The process to reach the goal is inner travel, meditation and the virtuous way of life.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

அறிவு விரிவடைந்தால் அன்பும் கருணையும் ஓங்கும்

பேரியக்க மண்டலத்தில் பெரிய பெருங்கோள்கள்
பிறப்பு இறப்பிடை மனிதன் பிற உயிரனைத்தும்
சீரியக்க ஆற்றல் காந்த சிறப்பென உணர்ந்தால்
செத்து போகவே பிறந்து வாழும் மாந்தர் வாழ்வில்
போர் விளைக்கக் காரணமாம் தான் தனது என்னும்
பொருள் புகழ் செல்வாக்குப் புலன்மயக்கம் வாழ்வில்
வேரழிக்கும் அறுகுணங்கள் ஐந்துபழிச் செயல்கள்
விளையாது நட்பு அன்பு கருணை இவை ஓங்கும்.

காந்தம் என்பது பேரியக்க மண்டலம் முழுவதும் நிறைந்துள்ள ஆற்றல். இது சுத்தவெளியாகிய இருப்பு நிலையும் அதிலிருந்து தோன்றிய நுண் பகுதியான விண்ணின் சுழற்சியால் எழும் விரிவலை யும் கூடிய ஒரு பேராற்றல். எங்கெங்கு விண்துகள் உள்ளதோ அங்கெல்லாம் விரிவலை தோன்றிக் கொண்டேயிருக்கும். பேரியக்க மண்டலத்தை இயக்க மண்டலம் என்றும் இருப்பு மண்டலம் என்றும் இரண்டாகப் பிரித்துக் கொள்வோம். இயக்க மண்டலம் என்பது விண் (Energy Particle), விரிவலை, விண் துகள்களின் கூட்டு இயக்கங்களான 1. விண்வெளி 2. காற்று மண்டலம், 3. அழுத்தக் காற்று மண்டலம் 4. நீர் 5. கெட்டிப் பொருள்கள் இவையெல்லாம் அடங்கிய பேரியக்க மண்டலம் ஆகும். விண் முதலாக அவை கூடிய அனைத்துமே அவற்றைச் சுற்றியுள்ள இருப்பு நிலையால் அழுத்தப் படுவதால் அவையனைத்தும் உருண்டு கொண்டேதான்

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.
இயங்குகின்றன. எனவே பேரியக்க மண்டலம் அனைத்தையும் ஒருங்கிணைத்து நோக்கும்போது அது ஒரு உருண்டை வடிவமாகவே இயங்குவதை உணரலாம்.

இந்த உருண்டை வடிவமான பேரியக்க மண்டலத்தைச் சுற்றிலும் அமைந்துள்ள இருப்பு நிலை - தூயவெளி. இதுதான் இருப்பு மண்டலமாகும். இருப்பு மண்டலம்தான் எல்லாம் வல்ல ஆற்றல் பெற்றது. இதன் அழுத்தத்தால், பேரியக்க மண்டலம், கோள்கள், நுண்ணணுவாகிய விண்துகள் அனைத்தும் சுழல்கின்றன.

இத்தகைய எல்லையற்ற ஆற்றல் சுழலால் விண் மையத்தில் வெற்றிடம் அமைந்து ஈர்ப்பு ஆற்றலாகிறது. கோள்களின் மையத்தில் மையஈர்ப்பு (Gravitational Force) அமைகிறது. உயிரினங்களுடைய உடல் மையத்தில் கருமையம் (Genetic Centre) அமைகிறது.

கருமையத்தைக் கொண்டு பருவுடல் (Physical Body), நுண்ணுடல் (Astral Body), காந்த உடல் (Bio-magnetism) மூன்றும் ஒன்று கூடி உடலியக்கம் மன இயக்கம் நடைபெறுகின்றன. பெரிய எல்லையில் அமைந்துள்ள வான்காந்த ஆற்றலின் வலுவான இயக்கத்திற்கு ஈடு கொடுத்து சீவகாந்தம் தொடர்ந்து இயங்க முடியாமல் சோர்வும், உடல், உயிர், காந்தம் ஆகிய கூட்டியக்கத்தில் குழப்பமும் ஏற்படுகின்றது. இதனால் பேரியக்க மண்டலத்திலுள்ள கோள்களின் கால நீளத்தோடு உயினங்களின் கால நீளம் (வாழ்நாள்) மிகவும் குறுகி இருக்கிறது. எனினும் பேரியக்க மண்டலத்தில் விளையும் காட்சிகளும், பயன்களும், உணர்ச்சி நிலையங்களான உயிரினங்களில்தான் இன்பமாகவும் துன்பமாகவும் முடிவு பெறுகின்றன.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

மனிதன் அறிவு, மிகச் சிறந்த இயக்க ஆற்றலாகும். அதைக் கொண்டு பேரியக்க மண்டலம் முழுவதும் நிறைந்து உயிரினங்களையும், கோள்கள் இயக்கங்களையும் இயக்குவது காந்த ஆற்றல்தான் என்பதை மனிதனால் உணர முடியும். காந்த ஆற்றலை உணரும் போதே அதிலடங்கிய இருப்பு நிலையாகிய தெய்வ நிலையையும் அதன் நுண் பகுதியான விண்தான் உயிர் என்ற தத்துவமாக இருக்கிறது என்பதையும் விண்ணின் சுழலால் ஏற்படும் விரிவலைதான் இருப்பு நிலையோடு கூடி காந்தமாகிறது என்பதையும் காந்தத்தின் தன்மாற்றம் (Physical transformation) தான் அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம், மனம் என்ற உண்மையையும் உணர்ந்து கொள்ளலாம். இவ்வுண்மையை உணர்ந்து விட்டால் மனிதனுடைய வாழ்நாள் மிகக் குறுகியது என்பதும் அவன் கால நீளத்தைக் கருதினால் பிறப்புடனே இறப்பு இணைக்கப்பட்டிருப்பதை அறிவான். இந்த விரிந்த அறிவில், பிற மனிதனோடு பகை, பிணக்கு, போர், பொறாமை, சினம், ஆகிய எந்த பழிச் செயல்களும் எழாது. நட்பை உருவாக்கும் அன்பும், பிறருக்கு உதவி செய்யும் கருணையும் இயல்பாகும். எனவே மனிதனாகப் பிறந்தவர்கள் எல்லோரும் சிந்திக்கும் வயது வந்த உடன் அகத்தவத்தின் மூலம் இறை, உயிர், காந்தம் இவற்றையறிந்து தெளிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

Expansion of Mind results in Love and Compassion

This is the nineth poem which deals with spiritual enlightenment and the peaceful life.

All should understand the fact that the functioning of the universe and the living opportunity for all beings are perfectly arranged by the universal magnetism. This will clear the illusions in the minds of the people. The fact is, the universe is of an inestimable volume and is functioning over an unimaginable time, filled with all resources for the survival of all living beings. However, each living being has an insignificant life-span. Each living being is born only to die; one's lifetime is the period of delay in dying. If this fact is kept in mind with awareness, there will be no greed or exploitation of material wealth, sensory enjoyment, fame and power in the living process of mankind. The six temperamental moods, sinful deeds, conflicts and wars will not evolve. Love and compassion, which are friendship and generosity, will develop in the personality to bring peace within self, society and among nations.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

தெய்வம், உயிர், அறிவு, மனம்

அஞ்சுவதேன் துணிந்துரைப்போம் அறிவே "நான்" தெய்வம்
அதுவேதான் வான்காந்தம் அகண்ட மண்டலத்தில்
பஞ்சமிலா விண்மையப் பகுதி இறையறிவாம்
படர்க்கைநிலை மனம் அதுநாம் பகரும் சீவகாந்தம்
வஞ்சமிலா சீவகாந்தம் வான்காந்தம் இரண்டே
வாழ் உயிர்கள் வான்கோள்கள் வளம் ஒழுங்கு காக்கும்
பஞ்ச புலன் கவர்ச்சியிலே பழகிக் கொண்ட மனிதன்
பரவசமாய் இன்பமுறப் பாடினேன் இவ்வுண்மை.

அன்புமிக்க அறிஞர் பெருமக்களே! உங்களில் பலர் அகத்தவப் பயிற்சியாலும், அறநெறி வாழ்வாலும், அகத்தாய்வு முறையாலும் அறிவை தெய்வமாக உணர்ந்து கொண்டீர்கள். நீங்கள் அகத்தவப் பயிற்சிக்கு முன்னதாக, கற்பனையால் உருவாக்கப் பட்ட தெய்வக் கருத்து உங்கள் அறிவாட்சித் தரத்தில் பதிவாகியிருப்பதால் இந்தப் பழக்கப் பதிவு நீங்கள் பெற்ற உண்மை விளக்க ஒளியை மேகம் சூரியனை மறைப்பது போல மறைக்கும். விழிப் போடு தொடர்ந்து ஆராய்ந்து அறிவேதான் தெய்வம் என்றுணர்ந்த உண்மையை உரைக்க மனம் கூசும்.

இந்தக் கூச்சத்தை மாற்றித்தான் ஆக வேண்டும். உறுதியாகவும், தெளிவாகவும், அச்சமின்றியும் இப்போது சொல்லுங்கள். அறிவே "நான்" தெய்வமே அறிவாக உள்ளது. அதே தெய்வம் வான் காந்தத்தில் இருப்பு நிலையாக உள்ளது என்று மனதை விரித்துக் கூறுங்கள்.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

விண்துகள் விரைவாகச் சுழல்வதால் அதன் மையப் பகுதி அசைவில்லா வெற்றிடமாக - இருப்பு நிலையாக உள்ளது. அந்தப் பகுதியும் தெய்வ நிலையேயாகும். எங்கு எங்கு தெய்வ நிலை இருக்கிறதோ அது அறிவாகவே திகழ்கிறது. அந்த விண் சுழலியக்கத்திலிருந்து வெளிவரும் அலைதான் உயிருடலுக்குள் சீவகாந்தமாகும். எந்த உயிரினத்திலும் சுழன்றியங்கிக் கொண்டிருக்கும் "விண்" துகள்தான் உயிர். உயிர் மையம் தெய்வம். அதன் அலைதான் உடல் முழுவதும் விரிவடைந்து சீவகாந்தமாகத் திகழ்கிறது. இங்கு நன்கு சிந்தனையோடு நினைத்துப் பாருங்கள். உங்கள் உயிர் மையத்தில் உள்ள இருப்பு நிலை தெய்வமாகவும், அதிலிருந்து எழும் காந்த அலை அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் இவையாக தன்மாற்றம் பெறுவதோடு அவற்றையெல்லாம் உணர்ந்து இன்பமாகத் துன்பமாக அனுபவிக்கும் மனமாகவும் இயங்குகிறது. உயிர் மையத்தில் உள்ள இறைநிலை உயிர்த்துகளுக்கு அப்பாலும் சுற்றியும் உள்ள இறைவெளியோடு கலந்து பேரியக்க மண்டல விரிவான இணைப்போடும் அதற்கும் அப்பால் இருப்பு மண்டலமான இறை வெளியோடும் இணைந்திருக்கிறது. மனம், மனதின் அடித்தளம் நிலை பொருள் அறிவு; அவ்வறிவின் மூலம் பேரியக்க மண்டலத்தில் தெய்வநிலை. அறிவே நான் என உணர்ந்தால் அதுவே தெய்வமாக உள்ளது என்பதில் ஐயமேயில்லை. ஐயமிலாத் தெளிவானஅறிவு விளக்கத்தில் உள்ள நீங்கள் ஒவ்வொருவரும் உறுதியாக நீங்கள் அறிந்துள்ள உண்மையினை அறிவேதான் நான், அதுவேதான் அகண்ட இயக்க மண்டலத்தில் வான் காந்தம், அதுவே தான் இருப்பு மண்டலத்தில் தெய்வம், பிரம்மம்; உணர்ந்தவர்கள் உறுதியாக

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.
எடுத்துரைத்தால்தான் உணராதவர்கள் அறிவு, துளிர்த்து விரிந்து அறிய முனையும். மேகத்தில் மறைக்கப்பட்ட சூரியனைப் போல், புகையில் மறைந்திருக்கும் நெருப்பு போல் மனத்துக்குள் மறைந் திருக்கும் இறைநிலை அனைவராலும் உணரப் பெறும்.

மனம், அறிவு, தெய்வம், சீவகாந்தம், வான்காந்தம் இவை தெளிவாக உணரப் பெற்றால் பெரிய இயக்க மண்டலத்தில் உள்ள கோள்கள் அனைத்தும் வான் காந்தத்தால் ஒழுங்காக இயக்கப்படும் காட்சியும், சீவகாந்தம் உடலுக்குள் கருமையமாக அமைந்து உடலியக்கம், மன இயக்கம் யாவும் சீராக நடை பெறும் அகக்காட்சியும், சிந்தனையாற்றல் மிகுந்த அறிவுக்கு மகிழ்ச்சியும் நிறைவும் அளிக்கும்.

இந்த உண்மை உணரும் வரையில் பேராற்றல் பெற்ற அறிவு ஐம்புலன் உணர்ச்சிகளில் சிக்கித் தோய்ந்து விளைவாக துன்பங்களையும், பொருள் வழி வாழ்வில் சிக்கல்களையும் ஏற்று விடுபட முடியாமல் திணறித் தவித்துக் கொண்டிருக்கிறது. அதே அறிவு தன்னை அறிந்து கொண்டால் அதன் விரிவு நிலையறிந்த தெளிவில் ஐம்புலன்களாலான உணர்ச்சிவயப் பதிவுகளைத் தாண்டி விடுபட்டு இறைவனோடு இணைந்து பேரின்ப நிலையடையும். இது எல்லாருக்கும் பொதுவாக இயற்கையில் அமைந்த பேறு ஆகும். நினைவை நிறுத்தி அறிவை உயர்த்தி அதுவே தான் எனவும், இறைநிலையே அறிவாகவும் திகழ்கிறது எனவும் உணர்ந்து, தெளிந்து, பரத் தோடு நட்பு கொண்ட நிலையில் மகிழ்ச்சியும்,

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.
நிறைவும் பெற்றுய்ய இந்த உண்மைகளை கவி வடிவில் பாடியுள்ளேன்.

வாழ்க வையகம்
வாழ்க வளமுடன்

அறிவுத் தொண்டாற்றும் அன்பன்
வேதாத்திரி

Realization of God, Life, Consciousness and Mind are the Goal of Life

This is the tenth and last poem in the series, "Voice of the Divine"

Dear spiritual friends! Through these poems we have expounded the philosophy of Nature to understand the greatness of universal magnetism and realize the Truth. Many of you would have realized the Truth and consciousness without the least doubt. Now you can say confidently and courageously, without hesitation that consciousness is self and the same is Static State – God, in the universal magnetism. The energy particle is the fraction of Unified Force, the Eternal Space; the center point of the energy particle is God and Consciousness. The psychic extension of consciousness is mind, which is the wave function of bio-magnetism. Magnetism, in its dual role of universal magnetism throghout the cosmos, and bio-magnetism in the living beings, is perfectly controlling and conducting all functions with pattern, precision and regularity. As a philosopher and God-realized person who got away from all kinds of conditionings and illusions, I am giving

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.
this enlightenment to all my fellow beings who are yet caught in the web of illusions and sensory intoxication. By liberation from the illusory concepts, I am sure that all of you will become one with the Supreme Being and enjoy the Divine Ecstasy.

நீ நானாய்க் கண்டேன்

இறைவா நான் எனை விடுத்து உனை மதித்தேன்
 எவரெவரோ புனைந்த கற்பனைகள் கொண்டு
நிறைவில்லை என் அறிவோ நிலைக்க வில்லை
 நேர்வழியோ புரியவில்லை நினைந்து ஆழ்ந்தேன்
மறைபொருளாய் இயங்கும் எனதறிவைப் பற்றி
 நானுணர்ந்தேன் அங்கு நீ நானாய்க் கண்டேன்
உறைந்து விட்டேன் உன்னில் நான் உணர்ந்துணர்ந்து
 உலகு இதை உணர்ந்துய்ய தொண்டு ஏற்றேன்.

— ஞானக்களஞ்சியம்.

ஒப்புதல்

உன்னில் நான் லயமாகி விழிப்பின் உந்தன்
 உறவினிலே பேரின்பம் காணுகின்றேன்
அன்னம் உண்பதைக் குறைத்து அறிவாய் வாழும்
 ஆன்மீகப் பயிற்சியினைப் போற்றுகின்றேன்
என்னுள்ளே அகத்ததுவாய் இயங்குகின்ற
 ஏற்றமிகும் பேரறிவு அவ்வப்போது
மின்னலது போல் காட்டும் வழி மதித்து
 மிகச்சிறந்த தொண்டேற்று நிறைவாயுள்ளேன்.

— ஞானக்களஞ்சியம்.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

அமைதியும் ஆனந்தமும் கண்டேன்

"உண்டு ஒரு தெய்வம் என்று சொல்லக் கேட்டேன்
உள்ளத்தில் அதைக் காண பெரிய ஏக்கம்
கொண்டு பல நாள் முயன்றேன், முடியவில்லை
குறைநீக்க வேண்டுமென்றார்", "நண்பா கண்ணால்
கண்டு வரும் பொருளனைத்தும் மாற்றம் கொள்ளக்
காரணமாய் ஓர் இயங்கும் இயக்கும் சக்தி
துண்டுபடா ஒரு நிலையில் உண்டு அன்றோ?
சோதித்துப்பார் நீயும் அதுவே" என்றேன்.

ஆதியே எல்லாம்

ஆதியிலே எழுந்த சுழல் அலை விண்ணாகும்;
அவ்விண்ணில் எழும் விரிவு அலையே காந்தம்;
ஆதியே முற்றறிவாய் வெளியாய்க் கொள்வோம்;
அவ்வறிவே விரிந்தியங்கும் அணுவில் கூட்டில்
ஆதியே அவ்வந்த நிலைகட் கேற்ப
அறிவாகி அதன் தன்மையாய் விளங்கும்
ஆதியே அறிவு அதே அணு அண்டங்கள்
அனைத் துயிரும் என விளங்க மெய்யுணர்வாம்

பேரறம்

பேரறமென்றால் இயற்கையென்று கூறும்
பெரும் பொருளின் ஆதிநிலை அதன் நிகழ்ச்சி
ஓரறிவு முதல் ஆறு அறிவாயுள்ள
உடல் உள்ள இயக்க விளை வினையுணர்ந்த
பேரறிவில் பிரம்மமே தானாய் உள்ள
பேருண்மை அகத்துணர்ந்து இன்ப துன்ப
சீரளந்து செயல் எண்ணம் சொல்களாலே
சீவ நலச் செயலாற்றும் சிறப்பு ஆகும்.

— ஞானக்களஞ்சியம்

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

கருமையம் (GENETIC CENTRE)

உயிரினங்களில் ஈரறிவு முதல் ஆறறிவு வரையில் வாழும் எல்லாவற்றிற்கும், உடலுக்கும் மனதுக்கும் இயக்க மையமாக, உடலுக்கு நடுப்பகுதியில் அமைந்துள்ளது கருமையம். சீவகாந்தச் சுழல், உயிர்ச்சுழல், வித்து மூன்றும் ஒன்றிணைந்து இயங்கும் உயிரினத்தின் இயற்கை நிதி கருமையம். இதுவே சீவகாந்தக் கருமையம் ஆகும்.

உடலுக்கு மூலப்பொருளான வித்துவில் உயிர் என்னும் சூக்குமப் பொருள் (விண்) திணிவு பெற்று சுழன்று கொண்டிருக்கிறது. ஒவ்வொரு உயிர்த்துகள் மையத்திலும் இருப்பு நிலையான இறைவெளி இடம் பெற்று அறிவாக (Consciousness) அமைந்துள்ளது. சூக்குமப் பொருளான விண் துகள்களின் சுழற்சி விரைவால் எழும் அலையே சீவகாந்தம். இந்த சீவகாந்தம்தான் பிரணவ உடல் ஆகும். எனவே கருமையத்தில் பருவுடல் (Physical Body) சூக்கும உடல் (Astral Body) காரண உடல் எனும் சீவகாந்தம் (Causal Body) மூன்றும் அடங்கியுள்ளன. உயிர் மையத்தில் அமைந்துள்ள அறிவு, உயிரின் சுழற்சி யால் எழும் விரிவலையான காந்த அலை மூலம் மனமாக படர்க்கை நிலையெய்தி, மறைபொருளாகவே வியத்தகு அற்புதங்களை ஆற்றிக் கொண்டிருக்கிறது. இங்கு மெய்ப்பொருளான இறைநிலையும், அதன் ஆற்றலான காந்தமும் மையம் கொண்டு இருப்பதால் இதனை அகம் என்றும் நெஞ்சம் என்றும் குறிப்பிடப் படுகின்றது. இந்த அகப்பொருளான சீவகாந்தக் கருமையத்தின் மதிப்பையும் அதை மையமாக வைத்துக் கொண்டு இறையாற்றல் நடத்தும் திரு விளையாடல்களையும் உணர்ந்து கொண்டவரை

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.
இறைவனின் திருவுருவமாகவே மதித்துப் போற்றலாம் என்பது வள்ளுவப் பெருமானின் வாக்கு.

ஐயப்படாது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தோடு ஒப்பக் கொளல்

என்ற கவியை நினைவுபடுத்திக் கொள்வோம்.

உயிரினங்கள் அனைத்திலும் சிறப்பாக விளங்கும் மனித இனம் இந்தக் கருமையத்தின் பெருமைகளை விளங்கிக் கொண்டால்தான் வாழ்வு சிறப்பாக அமையும். பொதுவாக சீவகாந்தக் கருமையத்தைப் பற்றிய அறிவு மனித குலத்துக்கு இன்றியமையாதது. சிறப்பாக ஆன்மீகப் பயிற்சியாளர்களுக்கு இயற்கைத் தத்துவத்தை தெளிவாகக் காட்டும் ஒரு ஒளிவிளக்கு இந்தக் கருமையத் தத்துவ அறிவு. இயற்கைத் தத்துவத்தை அது உள்ளவாறே உணர்ந்து கொள்ள மொழியின் மூலம் முழுக்காட்சியாக விளக்கிக் காட்ட முடியாது. தவத்தின் மூலம் மன அலைச் சுழலைக் குறைத்து இருப்பு நிலைக்குக் கொண்டு வந்து, தானே இறைநிலையடைந்து உணர்ந்து கொள்வதுதான் மெய்யுணர்வு. எனினும் அந்த நிலையை அடைய நேரான வழியையும், அடைந்த பின் ஒத்து நோக்கி மன நிறைவையும் பெறுவதற்கு அனுபவம் பெற்றவர்கள் மொழியின் மூலம்தான் தன் கடமையை ஆற்ற வேண்டும். இந்தக் கடமையுணர்வில்தான் இந்தக் கட்டுரையை எழுதுகிறேன். சீவகாந்தக் கருமையம் பேரியக்க மண்டல தத்துவத்தைத் தன்னுள் சுருக்கமாக அடக்கிக் கொண்டுள்ளதால் அதைப்பற்றி முதலில் சிந்தனையை விரித்துக் கொள்வோம்.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

பேரியக்க மண்டலம்

பேரியக்க மண்டலம் இரண்டு முக்கிய பகுதிகளைக் கொண்டதாகும். 1. இருப்பு மண்டலம். இது தூயவெளி. 2) இயக்க மண்டலம். இதுபஞ்ச பூதங்களாகிய விண்வெளி, காற்று, அழுத்தக் காற்று, நீர், நிலம் (அடர்த்திப் பொருள்) ஆகிய ஐந்து பிரிவுகளும் தனித்தனியாகவும் ஒன்றோடு மற்றொன்று கூடியும் இயங்கிக் கொண்டிருக்கும் பெரு மண்டலம் தான் இயக்க மண்டலம். மேலே காட்டிய ஐந்து பௌதீகப் பிரிவுகளும் விண் எனும் நுண் துகள்களின் கூடி இயங்கும் தோற்றங்களேயாகும். விண் துகள்கள் கூடிய ஒரு தொகுப்பின், அவற்றின் அடர்த்தியில் திண்மைநிலை வேறுபாடுகளைப் பிரித்துக் காட்டும் சொற்களே பஞ்சபூதங்கள் ஆகும்.

இறைநிலை

இயக்க மண்டலத்தைச் சுற்றிலும் கவசம் போல அமைந்திருக்கின்றது இருப்பு மண்டலம் எனும் தூயவெளி. இந்த இருப்பு நிலைதான் இறைநிலை என்றும், தெய்வநிலையென்றும், மெய்ப்பொருள் என்றும் வழங்கப்படுகின்றது. இருப்பு நிலையானது எல்லையற்றது. விரைவு, அறிவு எனும் இரண்டு தன்மைகளும் அடக்கமாகப் பெற்றுள்ளது. கட்புலனுக்கெட்டாத எல்லையுடையதாகையாலும், அதன் தன்மைகளான அறிவும் விரைவும் ஐம்புலன்கள் மூலம் மனத்தால் உணர முடியாமையாலும் சுத்தவெளி ஒன்றுமில்லாத வெற்றிடமாகக் கருதப் படுகிறது. ஆயினும், விரைவும் (Force) அறிவும் (Consciousness) மலர்ந்து புலன்களுக்குக் காட்சியாகும் போது இந்த இரு தன்மைகளுயும் இவற்றை

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.
அடக்கமாகப் (Inherent) பெற்றிருக்கும் இறைநிலையும் மனித மனத்தால் உணர முடியாதவையல்ல.

'விண்' எனும் பரமாணு

நீரில் அடங்கியுள்ள காற்று நுரைக் குமிழியாக வெளிப்படுவது போல இறைவெளியில் அடங்கியிருந்த விரைவு எனும் வேகம் உந்துக் குமிழிகளாக மலர்ந்தன. இது இறைவெளியின் நுண்பகுதியே ஆகும். விண்ணைச் சுற்றியுள்ள இறைவெளி அழுத்த வல்லமை பெற்றதாகையால் விண் தனது எல்லாப் புறங்களிலும் இருப்பு நிலையாகிய இறைவெளியால் அழுத்தம் பெறுகிறது. இந்தத் தூயவெளியின் அழுத்தத்தால் விண் எனும் நுண்துகள் கணிக்க முடியாத அளவில் தன்னைத் தானே சுற்றும் (Whirling) சுழலலையாகத் தொடர்ந்து இயங்குகிறது. தற்சுழற்சியுடைய எப்பொருளானாலும் அதன் சுற்று வட்டத்திலுள்ள விரைவு நடுப்பகுதிக்கு வர வர குறைந்து கொண்டே வருவதும், மையத்தில் ஒரு புள்ளியளவு சுழற்சியற்ற இடமாக அமைவதும் இயல்பு. இதே தத்துவப்படி விரைவாகச் சுழன்றியங்கும் விண்ணின் மையப்பகுதியும் வெற்றிடமாக அமைகின்றது. வெற்றிடம் என்றால் விண் மையத்தில் எதுவாக இருக்க முடியும்? சுழல்வதே இருப்புநிலைதானே? ஆகவே, இருப்பு நிலையே-இறை வெளியே, விண் மையத்தில் இடம் பெறுகிறது. இதுவே விண் மையத்தில் அமையும் கருமையம். எல்லாம் வல்ல இறைநிலையாகிய இருப்பாற்றலே தனது நுண்பகுதியான விண்ணின் மையப்பகுதியில் பரம விண்ணாகி அதனைத் தன் முழுமையில் அடக்கிக் கொண்டுள்ளது.

இந்த உண்மையினை அகத்துணர்வாகப் பெற்ற முற்காலத்திய தத்துவஞானிகள், இறைவன் அணுவுக்குள்

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.
நுண்ணணுவாகவும் அணுவுக்கப்பால் வெளியாகவும் நிறைந்து நின்று பேரியக்க மண்டலத்தையும் உயிரினங்களையும் அன்பினால் காத்தும் கருணையினால் இயக்கியும் வருகிறான் என்று கூறியுள்ளார்கள்.

தன்னிலிருந்தே தனது ஆற்றலாக வெளிப்பட்ட விண்ணையும் அதன் கூட்டு இயக்கங்களாக பஞ்ச பூதங்களையும், அவை கூடி இயங்கும் பரு உருவப் பொருட்களான சூரியன், கோள்கள் என்ற கோடிக் கணக்கான இயக்கப் பொருட்களையும் தாங்கிக் கொண்டிருக்கும் எல்லாம் வல்ல பரம் பொருள் தான் இருப்பு நிலையான இறைவெளி. இவ் வெளிக்குள் அடங்கியுள்ள இயக்க மண்டலத்தையும் அதைச் சுற்றிக் கவசம் போல அமைத்துக் காத்துக் கொண்டும் அணுமுதல் அண்டங்கள் அனைத்தும் இயங்க தனது அழுத்தம் என்றஆற்றலை தொடர்ந் தளித்துக் கொண்டும் உள்ள இறைவெளியையும் ஒருசிறு உவமையின் மூலம் விளக்குகிறேன். ஒரு பறவை முட்டையில் வெண்கருவைப் போல இருப்பு மண்டலமான இறைவெளியையும் அந்த வெண்கருவுக்குள்ளாக அமைந்திருக்கும் மஞ்சட் கருவைப் போல இயக்க மண்டலத்தையும் யூகித்துக் கொள்ளலாம்

இறைநிலையின் திருவிளையாடல்

சுற்றிலும் உள்ள இறைவெளியின் இடைவிடாத அழுத்தத்தால் விண்ணின் புறப்பகுதி விரைவாகச் சுழல, விண்மையம் அமைந்த மையப்பகுதியான கருமையம் மேலழுத்தும் ஆற்றலை வாங்கும் ஆற்றலாக, ஈர்ப்பு ஆற்றலாகச் செயல்படுகிறது. இப்போது இறைவெளியும், அதிலிருந்து தன்னாற்றலாலேயே பிரிவுபட்ட விண்ணும் இணைந்து

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

நடத்தும் திருவிளையாடலைக் கூர்ந்துணர்ந்து பேரின்பத்தில் திளைப்போம். இருப்பாற்றலான இறைநிலையின் அழுத்தத்தால் விண் விரைவாகச் சுழலுகிறது. இந்தச் சுழல் விரைவால் மையப்பகுதி சுழற்சியில்லா கருமையமாகி இறைநிலை இடம் பெறுகிறது. இந்தக் கருமையம் சுற்றியுள்ள அழுத்தத்தை வாங்கும் ஈர்ப்பு ஆற்றலாகச் செயல் புரிகிறது. அவ்வாறு மையத்தில் ஈர்க்கப்படும் அழுத்த ஆற்றலை விண் வாங்கி தனது வெளிப் புறத்தில் விரிவு அலையாக வெளியிட்டுக் கொண்டே இருக்கிறது. இந்த விரிவு அலை வெளிப்பட்ட வுடனே சுற்றிலுமுள்ள இறைவெளி அதனையும் வட்ட வடிவம் கொண்ட புள்ளியாகவும் விண் என்ற சுழலலையைச் சுற்றி வந்து கொண்டே யிருக்கும் துணைக்கோளாகவும் நிழல் விண்ணாகவும் (Shadow Particle) ஆக்கி செயல்படுகிறது.

விரிவு அலை தன்மாற்றம் பெற்றால் இருப்பு நிலையாகும்.

சுழல் அலையான விண்துகள்கள் கூடினால் பருமன் அமையும். ஆனால் விரிவலையான நிழல் விண் கூடினால் பருமன் வராது. ஒன்றிலே ஒன்று அடங்கி அதன் ஆற்றலில் திணிவு பெறும். ஆற்றல் மிகும்போது விண்ணின் கூட்டான பஞ்ச பூதங்களில் 'விண்'ணின் திணிவுக்கேற்ப அழுத்த அலையாக, ஒலியலையாக, வெளிச்ச அலையாக, சுவையலையாக, மண அலையாக தன்மாற்றம் பெற்று இறைநிலை யான இருப்பு ஆற்றலில் ஒன்றிவிடும். இதே விரி வலையான நிழல் விண்ணானது உடலுயிர் இயக்க நிலையமான சீவ இனங்களில் இன்ப துன்ப உணர்வுகளைப் பெறும் மனமாக அலையலையாக

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.
_ல் முழுவதும், புலன்கள் மூலம் வெளியேறி பிற
ாருட்களோடு இணைந்தும் அதனதன் தன்மை
உணருகின்றது. எத்தன்மையுடைய அலை
ாலும் அதிலுள்ள காந்த அழுத்தத்திற்கு ஏற்ப
எங்கும் நிறைந்துள்ள இறைவெளியால் ஈர்க்கப்
வடைகிறது. காந்த அலை பிறக்குமிடம்
வி...ம் இருப்பு நிலையான இறைவெளி
பன்னு...ய்வநிலை.

அகத்தவத்தால் மெய்யுணர்ந்த சித்தாந்த தத்துவ ஞானிகள் இறைநிலையை சத் என்றும் விண் எனும் யக்க ஆற்றலை சித் என்றும், காந்த ஆற்றலையும் ...கன் தன்மாற்ற விளைவுகளையும் அனந்தம் ... மூன்று தன்மைகளையும் ஒன்று ...ு சத்சித்அனந்தம் என்றும் கூறியுள்ளார்கள்.

பஞ்சபூதங்கள்

விண்ணின் கூட்டு இயக்கமே அவற்றின் திணிவு நிலை வேறுபாட்டுக்கொப்ப ஐந்து பிரிவுகளாகக் கூறப்படுவதே பஞ்ச பூதங்கள் ஆகும். விண்ணின் சுழற்சி விரைவு முழு அளவில் இருந்தால் ஒன்றை ஒன்று தள்ளி நிறுத்தும் இடைவெளி அதிகமாக அமையும். இதுவே விண் வெளியாகும். விண்ணின் சுழல் விரைவு சற்று குறைந்தும், ஒன்றோடு மற்றொன்று நெருங்கியும், ஒன்றை ஒன்று சுற்றிக் கொண்டும், இரண்டு விண்களுக்கு மேலாகக் கூடி நெருங்கி இயங்கும் களத்தைக் காற்று என்று கூறுகிறோம், இது போன்று விண்ணின் சுழல் விரைவு குறைவதற்கேற்ப நெருங்கி இயங்கும் தன்மையால் அழுத்தக்காற்று, நீர், கெட்டிப் பொருள் இவையாகத் தோன்றி பரவி விரிந்து வான்வெளி முழுவதும் நிறைந்து பேரியக்க மண்டலமாக இயங்கிக் கொண்டிருக்கிறது.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

கோள்கள் ஏன் சுழலுகின்றன?

நாம் காணும் ஒவ்வொரு கோளும் தற்சுழல் ஆற்றலாகவுள்ள விண்ணின் கூட்டுச் சேர்க்கையே. ஆகையால் எந்தக் கோளும் வான் வெளியில் அதன் திணிவு நிலைக்கேற்ப சுழன்று கொண்டே யிருக்கிறது. இந்த தற்சுழற்சி விரைவால் அந்தக் கோள் முழுதும் இயங்கிக் கொண்டிருக்கும் விரி வலையான காந்த ஆற்றல், அந்தக் கோளுக்கு நடுவில் மையம் கொண்டு ஈர்ப்பு ஆற்றலாகவும், வெளிப் புறப் பகுதியில் காந்த ஆற்றல் விரைந்து வெளியேறி தள்ளும் ஆற்றலாகவும் செயல்புரிகிறது.

கோள்களின் கருமையம்

இவ்வாறு கோள்களுக்கு மையத்தில் அமையும் ஈர்ப்பு பகுதிதான் கோளுக்குக் கருமையம். இதனை (Centripetal Force or Gravitational Force) ஈர்ப்பு ஆற்றல் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள்.

உயிரினங்களின் கருமையம் (Genetic Center)

விண்களின் கூட்டுதான் பஞ்ச பூதங்கள் என்பதை முன்னமே விளக்கியிருக்கிறேன். விண் துகள்களின் சுழல் விரைவு குறையும் அளவுக்கு அவற்றின் கருமைய ஈர்ப்பினால் அவை ஒன்றோடு ஒன்று நெருங்கி இயங்குகிறது. விண் துகளின் எண்ணிக்கைக்கு ஒப்ப அவை பல கூடும்போது, படிவங்களாக வடிவ (Crystal) அமைப்புப் பெறும். அவற்றின் எண்ணிக்கைக் கும் படிவ அமைப்புக்கும் ஏற்ப விண்கூட்டுக் குடும் பங்கட்கு தனித்தனியே தனிமங்களாக (Elements) பெயரிட்டிருக்கிறார்கள். எனினும், பரமாணுவாகிய விண் கூட்டங்களின் இடையே சுத்த வெளியும் விரிவலையான நிழல் விண்ணும் நிறைந்திருப்பதால்

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.
அவை காந்த ஆற்றலாகி, விண் நெருக்கத்துக்கு ஒப்ப அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் என்ற ஐந்து தன்மாத்திரை விளைவுகளைத் தருகின்றன. இந்தத் தன்மாத்திரைகளின் விளைவைக் கொண்டே தத்துவ ஞானிகள் விண்வெளி, காற்று, அழுத்தக் காற்று, நீர், நிலம் என்று பஞ்ச பூதங்களாக அணுக் கூட்டு நிலைகளைப் பிரித்துள்ளார்கள்.

உயிரினம்

பரமாணுக்களான விண் துகள்கள் கூடி அணு வாகவும், அணுக்கள் சில கூடி பேரணு (Molecule) வாகவும் பேரணுக்கள் சில, பல கூடி சிற்றறை (Cell) களாகவும் இயங்குகின்றன. ஒவ்வொரு விண்ணும் காந்த ஆற்றலை உற்பத்தி செய்யும் ஒரு நுண் கருவி யென்பதை நினைவிற் கொள்வோம். காந்த ஆற்றல் ஒவ்வொரு விண்துகளையும் சுற்றிக் கொண்டே யிருப்பதோடு விண் கூட்டுக் குடும்பங்களையும் சுற்றிக் கொண்டு அவற்றின் இணைப்பையும், தன் மாற்ற விளைவுகளையும் ஒழுங்கு செய்து கொண்டேயிருக்கும்.

கருமையம்

எந்த இடத்திலானாலும் பஞ்சபூதங்கள் ஒன்று கூடி அவை ஒன்றால் மற்றொன்று காக்கப்படவும், பாதகமடையாமலும் அளவு நிலையடையும்போது அந்த செல்களின் கூட்டத்தில் இயங்கும் காந்த அலையானது செல்களுக்கு இடையே ஒன்றுக்கொ ன்று காந்தத் தொடர்பு கொள்ளும் துருவங்களை (Polarity) ஏற்படுத்துகிறது. இவ்வாறு காந்தத் துருவத்தால் இணைப்பு கொண்ட சிற்றறைகள் கொண்ட பருவுருவில் காந்தச் சுழல் தொடர்ந்து

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

ஓடி அந்த உருவத்தில் மையம் அமைத்துக் கொள்ளுகிறது. இதுவே உயிரினங்களில் கருமையம் (Genetic Centre) ஆகும். இத்தகைய காந்தச் சுழலால் அந்தப் பரு உடலில் நீரோட்டம், வெப்ப ஓட்டம், காற்றோட்டம், உயிர் ஓட்டம் இவையமைந்து அதனதன் விரைவில் பருஉடலில் சுழன்றோடி இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்தக் கருமையக் காந்த ஆற்றல் அப்பருவுருவத்திலுள்ள எல்லா விண் மையங்களுக்கும் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளு கிறது. ஒரு பருவுடலில் இருக்கும் விண் மையம், விண் கூட்டு ஆகிய அணு மையம், அணுக்களின் கூட்டு இயக்கமாகிய பேரணு மையம், இவற்றோடு தொடர்பு கொண்டு கருமையத்தை இருப்பு நிலை யாக அமைத்துக் கொண்டு உடல் முழுவதும் காந்த ஆற்றல் பரவிச் சுழன்றோடிக் கொண்டிருக்கிறது. உடல் முழுவதும் விண்ணும் விண் கூட்டப் படிவங் களும் காந்தச் சுழலால் முறையாக இயங்கிக் கொண்டிருப்பதால் உடலிலுள்ள காந்தம் அழுத்த மாக, ஒலியாக, ஒளியாக, சுவையாக, மணமாக தன்மாற்றம் அடைந்து கொண்டே, இந்தத் தன் மாற்றங்களின் உச்சமாக ஐவகையான தன்மாத்திரை அலைகளை உணரும் மனமாகவும் இயங்குகின்றது. ஊறு, ஒலி,ஒளி, சுவை, மணம் ஆகிய தன்மாத்திரை அலைகளை மனம் என்ற ஆற்றல் உணர்வாகப் பெறும் சிறப்பு பெற்ற உயிரினங்களில் இயங்கும் காந்த ஆற்றல் சீவகாந்தம் (Bio Magnetism) எனப்படும்.

விண்மையத்தில் அமைந்த இருப்பு நிலை ஈர்ப்பு ஆற்றலாகவும், அதன் புறப்பகுதி தள்ளும் ஆற்ற லாகவும் செயல் புரிவதைப் போல, விண் கூட்டு இயக்கமான உடலிலும் கருமையத்தில் ஈர்ப்பு ஆற்றலும் அதற்கு வெளிப்புறத்தில் தள்ளும் ஆற்றலும்

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.
செயல்படுகிறது. இங்கு ஒரு பெரிய உண்மையை மனதில் கொள்ள வேண்டும். விண்ணின் கருமையம் உயிரினத்தின் கருமையத்தோடும், உயிரினத்தின் கருமையம் உலக உருண்டையின் கருமையத்தோடும் காந்த ஆற்றலால் தொடர்பு கொண்டு இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஒரு உயிரின் உடலில் ஓடிக் கொண்டிருக்கும் காந்த ஆற்றலின் சுழற்சியாலும் அது அடையும் தன்மாற்ற விளைவுகளான தன் மாத்திரை அலைகளாலும் உடலில் அந்தந்த சீவனின் தன்மைக்கேற்றபடி உணவு உறிஞ்சப்பட்டு அது ரசமாக, இரத்தமாக, சதையாக, கொழுப்பாக, எலும்பாக, மூளையாக, வித்தாக ஒன்றிலிருந்து மற்றொன்றாக மாறிக் கொண்டேயிருக்கின்றன. இவையெல்லாம் பூ கவர்ச்சியாலும், சூரிய வெப்பத்தாலும் உடலிலிருந்து வெளியேறிக் கொண்டே[illegible]ருக்கும் வெற்றிடங்களை நிரப்பி அந்த உயிரினம் [illegible]தொடர்ந்து வாழ உதவுகிறது.

தனித்தனியே முழு விடுதலை விரைவு (Velocity) உடைய விண் தான் உடலுயிரில் உயிரெனப்படுகிறது. இதனை சிதாகாசம் என்றும் (Life Force) கூறி வருகிறோம். உடல் முழுவதும் விரைவாக ஓடிக் கொண்டிருக்கும் இந்த உயிராற்றலை சூக்கும உடல் (Astral Body) என்று கூறுகிறோம். சீவகாந்தக் கருமையம் தான் பிரணவ சரீரமாகும். உடலியக்கத் தொடர் விளைவாக வித்து (Sexual Vital Fluid) உயிராற்றலான சூக்கும உடல், பிரணவ சரீரம் எனும் காந்த ஆற்றல், இவை மூன்றுமே உயிருடலில் மையம் கொண்டு இயங்குமிடம் சீவகாந்தக் கருமையம் ஆகும். பரு உடலுக்கு மூலமான வித்து, சூக்கும உடலுக்கு மூலமான உயிராற்றல், பிரணவ

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

உடலுக்கு மூலமான சீவகாந்த ஆற்றல் மூன்றும் ஒரு உயிருடலில் மூலாதாரம் என்னும் மையப்பகுதியில் தங்குமிடமாக இயக்க மையமாக அமைத்துக் கொண்டிருந்தாலும் இவையெல்லாம் பரவி விரிவாகச் செயலாற்ற வல்ல களம் தலையில் அமைந்துள்ள மூளை யாகும். இந்த மூன்று மதிப்புடைய பொருட்களுக்கு இருப்பிடமாக அமைந்த சீவகாந்தக் கருமையத்தை யோகியர்கள் **மூலாதாரம்** என்ற சிறப்புச் சொல்லாலும் மேல் மட்டத்தில் அமைந்துள்ள மூளையைத் துரியம் என்ற சொல்லாலும் குறிப்பிடுகின்றனர்.

கருமையப் பெருமை

பிரணவம் என்றால் பேரியக்க மண்டல உற்பத்தி, இயக்கம், முடிவு அனைத்தும் அடங்கிய பேராதார நிலையைக் குறிப்பிடும் ஒரு மதிப்புடைய சொல் லாகும். இறைநிலை, அதன் உள்ளடக்கத் தன்மை களாகிய விரைவு, அறிவு இம்மூன்றும் இணைந்தே பேரியக்க மண்டலத்திலுள்ள அனைத்துப் பொருள் களின் தோற்றம், இயக்கம், முடிவு எல்லாமாக ஒழுங்காக நடைபெறுகின்றன. காந்தத் தத்துவத்தை உணர்ந்து கொண்டால் அதற்குள்ளாக அனைத்தும் அடங்கியிருப்பதை உணரலாம். காந்தத்தில் இறை நிலை இருப்பு ஆற்றலாக இருக்கிறது. இருப்பாற்ற லிலிருந்து வெளிப்பட்ட நுண்ணியக்கப் பொருளே விண் ஆகும். விண் தான் இயக்க ஆற்றலாகும். விண்ணின் விரிவலையே அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம், மனம் எனும் விளைவுகளாகும். இவையனைத்தும் பேரியக்க மண்டல உண்மைகளை விளக்கும் காந்தத் தத்துவத்தில் அடங்கியுள்ளன என்பதைத் தெளிவாக உணரலாம். இந்தக் கருத்தில் கீழ்வரும் தத்துவப் பாடல் ஒன்றில்,

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

எந்த ஒன்றறிந்திடில் இறைவன்முதல் உயிர்வரை
எல்லாவற் றையும்உணர்த் துமோஅதுவே காந்தமாம்
முந்தையோர்கள் அகத்தவத்தால் முற்றுணர்ந்த போதிலும்
மொழிவதற்கு உவமையின்றி முட்டிமோதி நின்றனர்
இந்தநாள் விஞ்ஞானமோ ஏற்றம் பெற்றதாலதை
இயங்கிடும் மின்சாரம்மூலம் எல்லார்க்கும் உணர்த்தலாம்.
அந்தமாம் மெய்ஞ்ஞானத்தோடு அணுவின்ஞானம் இரண்டையும்
அறிந்துஉய்ய பாலம்போன்ற ஆக்கஞானம் காந்தமே.

என்று விளக்கியிருக்கிறேன்.

ஒரு மனித உருவத்தில் அடங்கியுள்ள கருமையம், விண்ணில் அமைந்துள்ள கருமையத்தோடும் பேரியக்க மண்டலத்தில் உருண்டோடி இயங்கிக் கொண்டிருக்கும் வான் கோள்களின் ஈர்ப்பு மையங் களோடும் (Centripetal Force) உலகில் வாழும் உயிரினங் கள் அனைத்திலும் உள்ள சீவகாந்தக் கருமையத் தோடும், இருப்பு நிலையாகிய இறைவெளியால் இணைந்துள்ளன. எனவே, மனித உருவம் தனியே இயங்கும் ஒரு பருவுருவம் அல்ல. இறைநிலையின் ஆற்றல்கள் அனைத்தும் உள்ளடக்கமாகப் பெற்று அதன் பெருமையை அன்பு, கருணை, அறம், ஞானம் என்ற மதிப்பு மிக்க அறிவு செறிந்த செயல்களால் மற்ற மக்களுக்கும் உயிரினங்களுக்கும் விளக்கிக் கொண்டிருக்கும் இறைவனின் தூதுவர் ஆவார்.

பூவுலகில் அமைந்துள்ள மைய ஈர்ப்பால் அதன் மேலே எந்தப் பொருள் வைத்தாலும் அதனை ஈர்த்துப் பிடித்து காத்துக் கொண்டிருக்கிறது. அதே போல மனித உருவத்திற்கு புறத்தே எந்த விதமான காந்த ஆற்றலின் தன்மாற்ற அலைகளையும் புலன்கள் மூலம் ஈர்த்துக் கருமையம் தன்னில் சுருக்கி இருப்பாக வைத்துக் கொள்கிறது. தேவை, பழக்கம், சூழ்நிலை

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh

இவைகளால் மன அலைச்சுழல் (Mental Frequency) ஒத்து வரும்போது முன்னம் பதிந்து இருப்பாக உள்ள அனுபவங்கள் ஒவ்வொன்றாக மூளை செல்கள் மூலம் மலர்த்தப்பட்டு எண்ணங்களாக அகக் காட்சி யாகின்றன. மூளை செல்களால் ஏற்படும் எண்ணங் களுக்கு ஏற்ப உடல் செல்கள் முனைந்து செயலாற்று கின்றன.

உதாரணம்

நான் ஒரு மரத்தைப் பார்க்கிறேன். அது 40 அடி உயரம், 30 அடி அகலம் இருக்கிறது. அந்த மரம் பருமனில் சுருங்கி எனது கண்களில் ஒரு் கொசு அளவாக பிரதிபலிக்கின்றது. இதே மரம் மூளை செல்களில் அழுத்த அலையாகப் பதிவு ஆகிறது. டெலிவிஷனில் ஒலியும் ஒளியும் அதன் டேப்பில் அழுத்தமாகப் பதிவதைப் போன்று மூளை செல்களில் அனைத்து புலனுணர் அனுபவங்களும் அழுத்தப் பதிவுகளாகின்றன. மூளையில் அமைந்துள்ள நுண்ணலை காந்த இயக்கம் இப்பதிவுகளை அலை களாக மாற்றுகின்றன. கருமையம் இழுத்து தன்னில் சுருக்கி இருப்பாக வைத்துக் கொள்ளுகின்றது.

எப்பொழுதேனும் நானே நினைவு கூர்ந்தாலும் அல்லது தேவை,பழக்கம், சூழ்நிலை இவற்றாலும் எனது .மன அலைச்சுழல் அந்தப் பதிவுக்கு ஒத்ததாக அமையும்போது கருமைய இருப்பிலிருந்து அப் பதிவை, மூளை செல்கள் இழுத்துக் காட்சியாக விரித்துக் காட்டுகிறது. இதுவே எண்ணமாகும். சீவகாந்த ஆற்றலால் உடல் முழுவதும் உள்ள செல்கள், மூளை செல்களோடு இணைக்கப் பெற்றி ருப்பதால் அந்த மரத்துக்குத் தொடர்பு உடைய

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.
செயல்களை முனைந்து உடல் கருவிகள் மூலம் செய்து முடிக்கிறது.

இவ்வகையில் ஒருவர் பிறந்தது முதல் இன்று வரையில் புலன்கள் மூலம் உணர்ந்த, கருவிகள் மூலம் ஆற்றிய அனைத்து செயல்களும் கருமையத்தில் பதிவு பெற்றுள்ளன. இப்பதிவுகள் அனைத்துமே வாழ்நாளில் ஒரு குழந்தை உண்டாகுமானால் அதனிடம் இதே கருமையத்திலுள்ள பதிவுகள் எல்லாம் மூலதன இருப்பாக (ஜெராக்ஸ் காப்பி போால) அமைந்து அதற்கேற்றவாறு அக்கருமைய ஆற்றலே உடலை அன்னை வயிற்றில் உருவாக்கு கிறது.

கருமையத்தின் தன்மைகள் இயற்கை, செயற்கை என்ற இருவகையிலும் ஆறு காரணங்களால் சிறப் படைகின்றது. அவை 1. கருவமைப்பு, 2. உணவு வகை, 3. எண்ணம், 4. செயல்கள் 5. அவ்வப்போது மாற்றமடைந்து கொண்டேயிருக்கும் கோள்களின் நிலை, 6. தற்செயலாக ஏற்படும் மோதல் (Accidents) விளைவுகள் ஆகும். இவை ஒவ்வொன்றாலும் கருமையத்தின் ஆற்றலும், தன்மைகளும் மாறிக் கொண்டேயிருக்கும்.

கருவமைப்பு உணவுவகை எண்ணம் செய்கை
ககனத்தில் கோள்கள் நிலை, சந்தர்ப்பத்தால்
வரும் இயற்கை நிகழ்ச்சிகளின் மோதல் எல்லாம்
வாழும் உயிர்கட்குப் பல இரசாயனங்கள்
தரும்,மாற்றம், தரமொக்க இன்பதுன்பம்
தகுந்த அளவாம். இதிலோர் சக்தி மீறி
பெருகி இரத்தச் சுழல் தடுக்க நோயாய் மாறும்
பின்னும் அதிகரித்து விட மரணம் ஆகும்.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

ஆன்மா (Soul)

உயிரினத்தின் சீவகாந்தக் கருமையம்தான் ஆன்மா (Soul) எனப்படுகிறது. சீவகாந்தக் கருமையம் என்பது மிக நுணுக்கமான பல இயற்கை இரகசியங்களை உள்ளடக்கமாகப் பெற்ற ஒன்று. அதைப்பற்றித் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கு கூர்ந்த சிந்தனையும், தத்துவ விஞ்ஞானத் துறைகளில் அடிப்படை அறிவும் வேண்டும்.

சீவகாந்தக் கருமையம் என்பது இயற்கையின் பரிணாமத் தொடரில், உயிரற்ற பொருட்கள் எல்லாவற்றிலும் உள்ள சிறப்புகளையும் உயிருள்ள பொருட்கள் ஓரறிவு தாவர இனம் முதலாக, ஈரறிவு, மூவறிவு, நான்கறிவு, ஐந்தறிவு, ஆறறிவு மனித இனம் வரையில் பல கோடி தலைமுறைகளில் பெற்ற அனுபவப் பதிவுகளையும் அடக்கமாகப் பெற்ற ஒரு சீவ இனப் புதையல் ஆகும். இதன் மதிப்பு தான் சீவ இனத்தின் மதிப்பு ஆகும். மனித உருவின் மதிப்பு சீவகாந்தக் கருமைய மதிப்பின் வெளிப்பாடேயாகும்.

கருமையத் தூய்மையும் அதன் கேடும் மனிதனுடைய எண்ணம், சொல், செயல்களால் பெரும்பாலும் ஏற்படுவதால் இதைப் பற்றியும் மனிதன் தெரிந்து கொள்ள வேண்டும்.

கருமையத்தின் மதிப்பை அறியாமல் மனித இனம் வாழ்நாளில் முறையற்ற செயல்களாலும், எண்ணங்களாலும் அதன் மதிப்பைக் குறைத்து விடுகிறது. இன்று உலகில் வாழ்ந்து வரும் மக்களில் **95%** தங்கள் கருமையத்தைக் களங்கப்படுத்தி விட்டிருக்கின்றார்கள். இதனால் மனவளம் நோயுற்றிருக்கிறது.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.
உடல் நோய்கள் பெருகியிருக்கின்றன. அறிவின் குறைபாடு, பிணக்கு, பகை, போர், அமைதியின்மை இவை பெருகிக் கொண்டேயிருக்கிறது. சீவகாந்தக் கருமையம் களங்கப்படும் செயல்களையும் அதைத் தூய்மைப்படுத்தி நலமாகவும் வளமாகவும் வைத்திருக்கும் செயல் முறைகளையும் இங்கு சுருக்கமாக அன்பர்கள் சிந்தனைக்காக விளக்குகிறேன்.

களங்கப்படுத்தும் செயல்கள்

1. உரிய பொருட்களைப் பெறவும், அனுபவித்து நிறைவு பெறவும் முடியாத ஆசைகளை சேர்த்துக் கொண்டே இருத்தல். இத்தகைய ஆசைகளின் இருப்பு கூடக் கூட மன அலைச்சுழல் விரைவு அதிகமாகி காந்தக் கருமைய ஆற்றலைக் குறைத்து வரும்.

2. பிறர் மனம் வருந்தத்தக்க செயல்களைச் செய்து அவர்கள் கருமையத்திலிருந்து எழும் வருத்த அலைகளை ஏற்று பதித்துக் கொள்ளுதல். இதனைச் சாபம் என்று கூறப்படுகின்றது.

3. பொறாமை முதலிய குணங்களால் பிறருக்குத் தீங்கிழைக்க நினைத்தல்.

4. உணவு, உறக்கம், உழைப்பு, உடலுறவு, எண்ணம் இவை ஐந்தை அலட்சியம் செய்தல், மிகையாக அனுபவித்தல், முரணாக அனுபவித்தல். இதனால் உடல் செல்கள், புலன்கள், உறுப்புகள் கேடுறும். இவையனைத்தும் கருமையத்தில் பதிவாகி விடும்.

5. உடல் வலிவும் நலமும், கல்வி உயர்வும் நலமும், இருந்த போதிலும் அதைப் பயன்படுத்தி பிறர்க்கு

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

உதவி செய்யாது சோம்பேறியாக இருத்தல், இதனால் பிறர் வளம் பறித்துண்டு வாழ்தல் என்பது தன்மையாக மாறி தனக்கும் பிறர்க்கும், தன்னிலிருந்து உற்பத்தியாகும் குழந்தைகளுக்கும், நோய்களும் துன்பங்களும் உண்டாகும்.

சீவகாந்தக் கருமையத் தூய்மைக்கும் வளத்துக்கும் ஏற்ற செயல்

1. தாய், தந்தை, குரு, ஆட்சித் தலைவர், தெய்வம் இவர்களை மதித்து வாழ்தல்.
2. ஒழுக்கம், கடமை, ஈகை மூன்றுமிணைந்த அறநெறி பின்பற்றி வாழ்தல்.
3. மன ஓர்மைக்கும், அறிவு விளக்கத்துக்கும் ஏற்ற அகத்தவம் பயிற்சி முறையாகச் செய்து வருதல்.
4. இரத்தம், காற்று, உயிர், சீவகாந்தம் இவை தடையின்றி ஓடி உடலைக் காத்துக் கொள்ள ஏற்ற உடற்பயிற்சிகளை அளவோடு செய்து வருதல்.
5. பெற்றோர்கள், வாழ்க்கைத் துணைவர், பெற்ற குழந்தைகள் இவர்களைப் பொறுப்போடும், அக்கரையோடும் காத்து உதவி வருதல்.
6. இறைநிலையுணர்ந்து அந்நிலையோடு அடிக்கடி ஒன்றிப்பழகுதல்.
7. மனித முயற்சியால் உற்பத்தி செய்த பொருட்களையும், இயற்கை வளத்தையும், பிறர் உபயோகிக்கும் பொருட்களையும் சேதப்படுத்தாது மதித்து நடத்தல்.
8. நாம் பார்க்கும் ஒவ்வொருவர் உடலும் இயற்கை என்ற பேராற்றலால் கட்டப்பட்டிருக்கும் பெருமையை உணர்ந்து, உடலுக்குள் அறிவாக

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh
விளங்குவது தெய்வத்தின் ஒளியே என்று மதித்து ஒத்தும் உதவியும் வாழ்ந்து வருதல்.

9. உள்ளத்தில் பகை, வஞ்சம், எதையும் வைத்துக் கொள்ளாமல் மன்னிப்பும், கருணையும் கொண்டு எல்லோருடனும் இன்முகத்தோடும் அன்போடும் பழகுதல்.

10. தேசம், மதம், சாதி, இனம், மொழி இவற்றால் மனிதரை வேறுபடுத்திக் காணாமல் எல்லோரும் இயற்கையின் மக்கள் என்ற நினைவில் வாழ்தல்.

உலகில் மக்கள் சமுதாயம் நலமுடனும் வள முடனும் வாழவேண்டும் என்ற எண்ணம் பொது வாக சிந்தனையாளர்கள் எல்லாரிடமும் இருக்கிறது. எனினும், அந்தப் பெரு நோக்கம் வெற்றிபெற ஏற்ற செயல்முறை திட்டங்கள் வேண்டும். சமுதாயப் பொறுப்பிலுள்ளவர்களும், சமுதாய நலத் தொண்டில் ஈடுபட்டுள்ளவர்களும் கூடி விஞ்ஞான அடிப்படையில் திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டும். இது நீண்ட கால மனித வளத்திட்டம். பல படி நிலைகளில் பலதுறை களில் இதனைச் செயல்படுத்த வேண்டும். உலக மக்கள் அனைவரையும் இணைத்த மக்கள் நலத் திட்டமாக அக்கறையோடும், பொறுப்போடும் செயலாற்ற வேண்டும். "உலகச் சூழ்நிலைத் தூய்மை, இயற்கை வளக்காப்பு" எனும் பெருநோக்கில் உலக அரசாங் கங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து ஆராய்ச்சி செய்து செயல் முறைகளையும் உருவாக்கி வரு கின்றன. இதேபோல மனித குல வளம் காக்க, சீவகாந்தக் கருமையத் தூய்மைக்கும் ஆராய்ச்சியும், செயல் திட்டங்களும் தேவை. "மனிதன் திருந்தினால் உலகம் தானாகத் திருந்தி வளம் பெறும்" என்பது பழமொழி.

சீவகாந்தக் கருமையத் தூய்மைக்கு, கருத்தரித்தல்,

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

கருவுற்ற பெண் பிள்ளைப்பேறு வரையில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள், குழந்தை வளர்ப்பு முறை, முறையான வாழ்க்கைக்கு ஏற்ற கல்வித் திட்டம், மனதையும், உடல் நலத்தையும் சீராக வைத்துக் கொள்ள வேண்டிய வாழ்க்கை விஞ்ஞானக் கல்வி இவையனைத்தும் ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள ஏற்ற வாய்ப்பையும் சூழ்நிலைகளையும் சமுதாயத்தில் அமைத்துக் கொடுக்க வேண்டியது சமூக நல நோக்கத்தோடு தொண்டாற்றும் தலைவர்கள் கடமை.

பேரியக்க மண்டலத்தில் உள்ள விண்முதல் உருவத்தில் பெரியதான கோள்கள், ஓரறிவு தாவரம் முதல் ஆறறிவு மனிதன் வரையிலுள்ள உயிரினங்கள் இவற்றில், உள்ளும் புறமும் ஊடுருவி நிறைந்து, ஒழுங்காக அனைத்தையும் இயக்கிக் கொண்டிருக்கும். **1. எல்லாம் வல்ல பேராற்றல்** (Unified Force) **2.** கண்ணால்காண முடியாத நுண்ணணுவான உயிராற்றல், பேரியக்க மண்டலத்தில் சடப் பொருள்கள், உயிர்ப் பொருள்கள் அனைத்திலும் ஊடுருவி நிறைந்து ஒவ்வொரு அசைவிலும், செயலிலும் தக்க விளைவைத் தரும். 3. வான்காந்த சீவகாந்த ஆற்றல் இம்மூன்று தத்துவங்களும் மக்கள் புரிந்து கொள்ள முடியாமல் மறைபொருட்களாக உள்ளன. இவற்றை தத்துவ ஞானிகள், விஞ்ஞானிகள், மருத்துவ நிபுணர்கள், சமூக நலநோக்கமுடைய அறிஞர்கள் கூடிய உலகப் பொது ஆராய்ச்சி மன்றம் அமைத்து இந்த மூன்று தத்துவங்களையும் தெளிவாக வயது வந்தோர் புரிந்து கொள்ள ஏற்ற பாடத்திட்டம் கல்விக் கூடங்களில் ஏற்பாடு செய்யவேண்டும். உலகப் பொது அறிவாராய்ச்சி மன்றப் பொறுப்பில், இருட்டறையில் உள்ள தெய்வம், உயிர், காந்த

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.
ஆற்றல் மூன்றும் வெளிச்சத்துக்கு வந்து விட்டால் இரண்டு மூன்று தலைமுறைகளில் உலகம் அறிவில் தெளிவு பெற்று விடும். எண்ணம், சொல், செயல்கள் அறநெறிக்குட்பட்டு நிகழும். உலக நலப் பெரு நோக்கமுள்ள செல்வந்தர்கள் சிலர் கூடி முயற்சி எடுத்தால் இம்மாபெருந் திட்டம் வெற்றி பெறும்.

சீவகாந்தக் கருமையம் மனித இன வாழ்க்கை நிதி · செயலுக்குத் தக்க விளைவைத் தரும் தெய்வீக நீதிமன்றம். பிறப்பிற்கும், இறப்பிற்கும், தொடர் பிறப்புகள் பலவற்றுக்குமிடையே வினைப்பதிவுப் பெட்டகமாகத் தொடர்ந்து வரும் மாயத் துணைவன். தெய்வத்தையும், மனிதனையும் இணைத்துக் காட்டும் அறிவின் பேரின்பக் களம். இதன் பெருமையை, மதிப்பை, அதனைப் போற்றிக் காக்கும் முறையை மக்கள் அனைவருக்கும் உணர்த்தி மனித குலம்உய்ய ஓர் ஒளி விளக்காக அமைந்திருப்பதே அறிவுத் திருக் கோயில். இதன் மூலம் ஒவ்வொருவரும் அறிவுத் திருக்கோயிலாகவே திகழ்வதை உணர்ந்து பிறவிப் பயனை அடையத் தொண்டாற்றுவதே அகத்தவச் சாதனையாளர்கள் வாழ்க்கை நெறி.

அன்பர்களே! எனது வாழ்நாளில் என் வயது பத்து முதலே ஆன்மீக சிந்தனை தொடங்கியது. மெய்ப்பொருள் உணர்ந்த வயது முப்பத்து ஐந்து. சிந்தனை காலத்திலும், தெளிவு பெற்று உண்மைகளை ஒட்டி வாழ்க்கை நடத்திய காலத்திலும் பெற்ற அறிவு விளக்கத் தொகுப்பே இக்கட்டுரையாகும். எனது 82-வது பிறந்த நாள் விழாவின் அன்பளிப்பாக இக்கட்டுரையை எனது அன்பர்களுக்கும், நண்பர் களுக்கும் அளித்து நிறைவு பெறுகிறேன்.

வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்

அருட்தொண்டன்,
வேதாத்திரி.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

உள்ளது மலர்ந்தது உலகங்கள் உயிர்களாய்

இருப்பு நிலை இயக்க நிலை
சிவம் சக்தி வெளி விண் ஒன்றே
இயக்க நிலை விண் சுழலின்
அலை விரிந்து இருப்பு நிலையொடு கலக்க

கருப்பொருளாம் காந்தமதாய்ப்
பேரியக்கக் களவிரிவாய்ப் பரவி நிற்கும்
கண்முதலாம் புலன்களுக்குக்
காந்தமதன் தன்மாற்றம் ஊறு ஓசை

நெருப்பு சுவை மணம் மனம் என்றாறு
விதமாய் மலரும் மறையும் காணீர்
நிலையற்ற இவ்வாறும்
தொடர்ந்தியங்க நிலைத்தவை போல் மயங்கத்
தோன்றும்

பருப் பொருளில் நுண்ணணுவும்
நுண்ணணுவில் உட்பொருளாம் சிவமும் காண
பார்ப்பவனே பரம் பொருளாய்ப்
பார்ப்பதெல்லாம் அவன் அலையாய் உணரலாகும்.

— ஞானக்களஞ்சியம்

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

The Genetic Center

The human being is a complex phenomenon comprising three different aspects or "bodies" : the physical, the astral, and the causal (magnetic) body. All three are interlinked with one another. The physical body is a perceptive structure made of millions of cells. The astral body is the spiritual body, comprised of countless life-force particles (energy particles) with self-rotative spinning motion. The causal body is the net bio-magnetic wave constantly emanating from the life-force particles by their spinning motion.

By the powerful circulation of the bio-magnetic wave, a center point is established in the center of the body, at the sex gland. By the attractive force of bio-magnetism, the center of the astral body is established with the bio-magnetic center. The metabolic routines of the physical body transform food into juice, blood, flesh, fat, bone, marrow and sexual vital fluid. This sexual vital fluid is the essential compound of the physical body. By the attractive force of the magnetic and spiritual center, the sexual vital fluid also is reposited there. These three have jointly evolved as the "Genetic Center", which is the seat of all mental, physical and spiritual functions in the human being.

Treasure of human values

So the Genetic Center is the divine treasure of human existence. As much as one understand its value, sincerely maintains and respectfully uses its benefits, that much is the value, happiness and success in one's

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.
life. Thus, it is extremely important to understand the nature and potential of the Genetic Center. As the Genetic Center of man is linked with the center point of the energy particle (static state) and thus the centers of the earth and all planets, let us expand our thought to a total perspective of the universe.

The universe is of Two Parts

We see the universe as a huge field of stars, planets and space. It is of two aspects : the functioning aspect and the static aspect. Energy particles and their associations are classified into five "elements" : 1) energy, 2) air, 3) heavy air, 4) liquids and 5) solids, according to the intensity of particle association and specific ratio of particles to space. These five elements are termed "Panchaboota" in eastern philosophy. Various proportions of these five elements are seen as masses throughout the universe. A huge field of unimaginable volume covering the field of five elements and their associations is the functioning part of the universe. The functioning part of the universe is a virtual sphere in shape. How and why is the universe spherical in shape? As the universe is the collective field of millions of masses which have rotating nature, and each mass is a collective association of spinning energy particles, the functioning part of the universe is inevitably a sphere in shape. Surrounding this spherical universe, the eternal pure space exists, which is the non-functioning part of the universe, static state.

The Static State is Plenum, Omnipotent and Almighty

The static state, the eternal pure space, has force and consciousness as inherent (latent) qualities. The eternal

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

space encompasses and surrounds the entire functioning universe. We can imagine the static aspect of the universe covering and protecting the functioning part as the yellow yolk is surrounded by the white albumen in a bird's egg.

Order of function with attraction and repulsion

In the functioning universe, everything from the smallest particles up to the greatest sun is moving with self-rotative force. This acts as repulsive force and maintains distance between particles and between masses. By inherent force, the eternal mighty static state exerts constant pressure all around the functioning universe.

As all particles and masses have evolved only from the static state, inbetween all particles and masses the eternal space fully and **penetratingly exists** as the containing and protecting force. By the surrounding pressure of the static state the whole functioning universe is being contained and compressed. Thereby no particle or mass can go away from one another beyond a certain distance conditioned by their respective repulsive forces.

Although the Eternal Space is Almighty and has force and consciousness as inherent qualities, its volume is unimaginable and its qualities are latent and invisible. Therefore this radical pehnomenon is only known as nothingness, a "static state" in language and in concept. Its intrinsic, inherent force emerges as a whirling wave of an infinitesimal volume. Due to the surrounding pressure of the Eternal Space it continuously spins.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

This is an **energy particle;** it is the basic, fundamental unit of the universe, the constituent of any mass.

It is a wonder that even though the energy particle is infinitesimal, it is itself divided into two parts : static and dynamic. At the center of its whirling motion there is a static point; the dynamic portion is the whirling periphery. The center static point works as attractive (gravitational) force and periphery functions as repulsive force. The center point of the energy particle is **gravitational force,** linked with the surrounding Eternal Space existing throughout the functioning universe as inter-particle, inter-mass space and it is also linked with the Eternal Space (static state) beyond the functioning universe.

Spreading Wave is a puzzle to the researchers

One more wonder in the evolutionary process is the spreading wave which emanates from the energy particle. This may be descriptively termed as a "shadow particle" This particle cannot associate into a mass, but characterizes all masses by its physical transformation into pressure, sound, light, taste and smell. By the friction between the energy particle and the external, Eternal Space, the emerging spreading wave emerges, that is a shadow particle and itself is magnetism.

The spreading wave is a mysterious phenomenon in its evolution, existence, functions and results in the universe. It is produced as a wave by the friction between the energy particle's movement and the surrounding static state, and forms a spherical particle by the surrounding pressure of the space. The fundamental energy

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.
particles can associate into masses; the "shadow particle" hasn't the property of association into mass, but characterizes every mass by its physical transformation into pressure, sound, light, taste and smell, and reverts to static state by undergoing such transformation. As the spreading wave is an offshoot of a parent energy particle, I have called it a "shadow" particle. Once again, it is to be emphasized that the energy particles are the fundamental building blocks of mass, the shadow particles are the magnetic aspect in the inter-particle space of every mass which transform into pressure, sound, light, taste and smell and become static state and joins with the space. The shadow particle is a wave, it is a particle (because it is spherical in shape), it is the universal magnetism; it is the basis of the multifarious values found throughout the universe.

The aim of this article is to reveal the great value of the Genetic Center and its mysterious functions linked to the universe through the unified force (Eternal Space) With this light of knowledge, it is sure that humanity will progress in its cultural value and enjoy health, happiness and peace, avoiding (or at least reducing) the negative aspects of life.

Force is the cause of all functions and changes of the universe; only force moves everything. Movement of force results in clash, reflection, refraction, penetration and interaction, effecting changes in everything constantly. All such changes are perceived as the characteristics of inanimate masses and animate beings.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

Static State is the Source of all Forces and it is Unified Force

Where did all force originate? If any force is reduced, ultimately it will come to stillnes-that is static state. By common sense one can assume that the origin of force is static state. Static state is not other than the Eternal Space which is all-pervasive throughout the universe. The force within the static which was latent as an inherent quality became significant as a whirling wave which is the energy particle. It must be understood that the energy particle is, in fact, a fractional part of the static state. By the surrounding pressure of the infinite static state, the particle characteristically and constantly spins and moves. The periphery of the energy particle is repulsion and the center point, which remains static, is attraction or gravity.

Here, the one original force which was inherent in the static state has emerged as the two fold-force of attraction and repulsion. The energy particles asssociate to form mass, and mass also moves with rotative motion by the net collective force of all its particles. The net attractive force of the mass' particles is intensified at the center of the mass and acts as centripetal force. This is the same principle as in the individual energy particle. The center of a mass attracts other mass' centers, while the repulsive force of the mass repels other masses so that they are kept at a distance.

The same attractive force centered in a living being becomes its Genetic Center In the Genetic Center the three essential principles of the living beings are

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.
joined. These three are : 1. sexual vital fluid, which is the essential compound of the phycial body; 2. the life force particles, which are the essential constituents of the astral body; and 3. the intensified bio-magnetism which is the essential core of the causal body. These three principles are thus interlinked in the Genetic Center. Realising the true and great values of the Genetic Center and its powerful universally linked potential, the philosophers adore the living being as temple of God.

Thus, through the static state, there is an interconnection of everything in and beyond the universe. The static state (Eternal Space) existing throughout the universe, the Genetic Center of every living being, the gravitational center of all celestial bodies, and the center point (attractive force) in every energy particle, whether individual or in a mass – all are invisibily connected and every one is characterising others through their wave function, according to the receptivity and compatibility. By this universal link, every person is affected with changes of character and values, in addition to the effects of their own actions.

Consciousness, which maintains order of function in everything is the invisible quality of the static state. Consciousness orders the attractive and repulsive forces of everything by maintaining the three parameters of : pattern (structural specification), precision (the sum of characters and qualities accrued up to the present), and regularity (perfect timing). The mysterious phenomenon of consciousness extends its fuction as mind with its base or working center in the Genetic Center of living beings.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

Imprints of Deeds

As every celestial body by its centripetal force attracts everything kept on its surface towards its center, all the received waves of pressure, sound, light, taste smell and mind are attracted by the Genetic Center and stored. For example, one may see a peacock. Its form is 4' × 2' The form reaches one's eye, and is reduced into a tiny but complete figure. When this shrunken image of the peacock clashes on the brain cells within, it registers only as a characterized pressure, such as the imprint of sound is registered on an audio tape. Immediately the wave received by the brain is attracted by the Genetic Center and stored in its bio-magnetic capacity. Thus the Genetic Center is characterized with the experience of the sight of the peacock. Whenever the same mental frequency recurs (due to need, inducement or some other reason) the brain magnifies the imprints stored at that frequency and one recalls the sensation and experience of the past.

In the same manner, all the waves of sensory, psychic and physical experiences (e.g. movements of the body, desires, decisions, discoveries, etc.) are received by the Genetic Center and stored. All these imprints of waves characterize one's personality. One's 'present life' imprints are those accrued from the date of birth up to the present; the 'hereditary' imprints are those which one is born with, having been accrued through countless generations. Ofcourse, everyone is of both hereditary and present life imprints. Accordingly the physical

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.
structure and spiritual values are precisely significant. Nature's system of imprints and reflection can be compared with the computer mechanism in the modern age.

The static state is the Supreme Being; all powers of Nature are managed by its super-consciousness. Through bio-magnetism, the divine phenomenon of Nature, the Genetic Center of a living being is functioning as a **court of divine justice,** giving appropriate results and rewards for every movement and deed. From every infinitesimal energy particle to every mass, each functions as a unit of magnetism, radiating its own waves according to its structure and movements. In their clashes with one another such magnetic waves become physically transformed into pressure, sound, light, taste, smell and mind and characterize one another by clash, reflection, refraction, penetration and interaction. In a living being, physical transformation of bio-magnetism results in feelings of pain, pleasure, peace or ecstasy.

As said before, every perception and feeling is received, registered and stored by the Genetic Center. As the mind is a phenomenon of bio-magnetism (the sixth level of physical transformation of magnetism) it reacts to face, counteract or balance every experience. In reaction to every feeling, mind emerges with a need of something, action or environmental change. Then the same mental force further develops with co-operation of physical cells into zeal, action, result, enjoyment, experience, research, realization and conclusion. Every shape and image of the mind becomes a characterized wave, registered and imprinted in the Genetic Center.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

Every mental wave affects the Genetic Center in two ways: first of all, a thought creates an imprint. According to its associated motive or attitude, it has an appropriate result in one's astral body and the cells of the physical body, characterizing them accordingly. If any action or thought is directed outside of oneself, one's bio-magnetic wave instantly contacts the aimed object, affects an appropriate result there, and returns to the source characterized by the effect of contact with the object. The returning wave affects the Genetic Center by being received, registered and stored. So every mental wave affects one's Genetic Center upon its outset and upon its return after being characterized by contact with its object.

All waves are curved by the static state.

As the static state is omnipresent and has the quality of pressure (or attraction), it resists every wave and pushes it to curve. By the pressure of curving, a boomerang action is described and the wave is returned to its point of origin. Upon emergence of a mental wave an imprint has already been made in the Genetic Center; upon return, the Genetic Center recognizes and identifies its own wave and receives and stores it. Any imprinted wave may be magnified by the brain to be recalled as a memory. The physical cells of the body are always affected by one's mental activities. The physical body cooperates and reacts according to the functions of the brain; the body is induced and activated to function on every level according to one's thoughts. So one's every act,

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.
whether thought, word or deed, unfailingly results in pain, pleasure, peace or ecstasy. In this sense, one must realize that in time, every action gives an appropriate result to the doer.

The Descent of Imprints

A child is conceived and born with all imprints of the parents. Likewise, the seed of every plant is encoded with all the qualities and characters of the parent plant and shows every aspect over time, as it grows.

Hence, I emphasize the fact that the Genetic Center is the divine treasure of mankind. It is the court of justice of the Unified Force, the manufacturing site of all feelings of one's present life and the repository of imprints for the progeny. Thus everyone should be aware and respectful of the Genetic Center.

For survival, enjoyment of pleasure, peace and ecstasy and to develop consciousness to its perfection, the Genetic Center must be maintained with health and morality by positive thoughts and virtuous deeds. The waves of thought and action which most disturb the Genetic Center are produced from the following :

1) Mental accumulation of unfulfilled desires and imaginary expectations;
2) Causing pain or misery for others; so that the suffer's mental wave become curse.
3) Transgressing the natural and moral limits and methods regarding food consumption, work, rest, sex and use of thoughts.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

By such transgressions the cells, limbs, senses and parts of the body are deteriorated. As much as one's Genetic Center is healthy and sincerely maintained, that much is one's success, happiness and peace in life.

According to my developed knowledge and revelation of Truth by the Almighty, I have surrendered my life and knowledge to the super-conscious Universal Being. As my body has been produced, raised, protected and maintained with love and compassion by the facilities and commodities made available through the labour of millions of people, I have surrendered all the results of my deeds to humanity. With this attitude of sincere duty consciousness and obligation, I am doing my daily services, speaking and writing to help others through my knowledge and experiences.

With my love and affection, I present this article on the subject, "The Genetic Center" as a gift to my friends on the eve of my 82nd birthday. (Aug. 14, 1992) as part of our World Peace Celebration.

May the whole world of human society be blessed by the Almighty with all prosperities of life wisdom and peace.

– Vethathiri

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

உள்ளது

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

மலர்ந்தது

உலகங்களாய்

உயிர்களாய்....